Ilampirai

# இளம்பிறை

ஏப்ரல் 1969 ★ 30 சதம்

இலங்கை
முஸ்லிம் லீக்
—வரலாற்று நோக்கு

★

யானை
— சிறுகதை

★

பந்த நூல்
—கொண்டோடி சுப்பர்

★

மத்து
கட்டுரைத் தொடர்

★

மலாயாவில் தமிழ்க்
கவிதைகள்
—விமர்சனம்

★

தமிழ் நாடு
முஸ்லிம் லீக்
—புதிய தகவல்கள்



# ஸ்டீம் பீடி

வழங்கும்

## ரூபாய் 10,000 க்கும் மேற்பட்ட பரிசுகள்!

25 ரூபாய் கொண்ட
100 பரிசுகள்

10 ரூபாய் கொண்ட
250 பரிசுகள்

எண்ணிக்கையற்ற

## விசேட 100 ரூபாய் பரிசுகள்

விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் பத்திரம்
எல்லா ஸ்டீம் பீடி வியாபாரிகளிடமும் பெறலாம்.

ஸ்டீம் பீடியின் சிறந்த புகை இன்பத்தைப் பருகுவதோடு நிறைந்த பரிசுகளும் பெறுங்கள்.

தயாரிப்பாளர்:

தொலைபேசி: 34580

**என். பி. அப்துல் கபூர்,**
102/2, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13.

# இளம்பிறை

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

மாலை 5 | ஏப்ரல் 1969 | பூ 5

நிர்வாக ஆசிரியர்:
எம். ஏ. ரஹ்மான்

★

திங்கள் வெளியீடு

★

அலுவலகம்:
இளம்பிறை,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13
இலங்கை.
தந்தி: அரசு

★

Office:
**Ilampirai,**
231, Wolfendhal Street,
Colombo-13 (Ceylon)
Cable: **ARASU**

இளம்பிறையில் வெளிவருங் கதைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளில் வெளிவருங் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

## இந்தப் பூவில்.......

இலங்கை முஸ்லிம் லீக்
டாக்டர் எம். ஸி. எம். கலீல் 2
பொறுப்பற்ற போக்கு! 5
வரலாற்றுக் கண்ணோட்டம் 7
லீக் அங்கும் இங்கும் 11

தமிழ்நாடு முஸ்லிம் லீக்
புகழுரைகள் சில 14
பொருளாளர் நிலை என்ன? 16

யானை — சிறுகதை 25
மத்து 43
பந்த நூல் 36

மலாயாவில் தமிழ்க் கவிதைகள்
—விமர்சனம் 50

அமைச்சரும்
இளம்பிறையும் 54

# டாக்டர் எம். ஸி. எம். கலீல்

இலங்கை வாழ் முஸ்லிம்கள் மத்தியிற் காலத்திற்குக் காலம் பல தலைவர்கள் தோன்றியுள்ளார்கள். படிப்பினுல் — பண்பினுல் — கல்விச் சேவையினுல் — தன்னலமற்ற தொண்டினுல் — தீர்க்கதரிசனமான உழைப்பினுல் முஸ்லிம் மக்களின் ஒப்புயர்வற்ற தலைவராக உயர்ந்து நிற்பவர் காலஞ்சென்ற ரி. பி. ஜாயா அவர்களேயாவர். இந்த ஒப்புயர்வற்ற தலைவரின் தேர்ந்தெடுக்கப்பட்ட வாரிசாக வெகு இயல்பாகவே டாக்டர் எம். ஸி. எம் கலீல் அமைந்தார். சுதந்திர இலங்கையின் முதலாவது முஸ்லிம் லீக் தலைவராக டாக்டர் கலீல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நீண்ட இருபத்தியொரு ஆண்டுகளாக அவரே அப்பதவியை நிறைவுடன் வகித்து வருகின்றுர்.

ஐ. தே. கட்சியின் முதிய தலைவர்களுடைய முழு நம்பிக்கைக்கும் எக்காலத்திலும் பாத்திரமாக உள்ள ஏக முஸ்லிம் தலைவரும் டாக்டர் கலீலே. இன்று, 'நானே முஸ்லிம்களின் பெருந்தலைவன்' என சுய நியமனஞ் செய்பவர்கள் வேறு அரசியற் கட்சியில் 'பொடிய'ராக ஒட்டிக் கொண்டிருந்த காலத்திலேயே, டாக்டர் கலீல் ஐ. தே. கட்சியின் துணைத் தலைவராகப் பணியாற்றினுர். அக்கட்சியின் முதிய துணைத்தலைவர்களுள் ஒருவராக இன்றும் பணியாற்றுகின்றுர். 1956-ஆம் ஆண்டில் ஐ. தே. க. படுதோல்வியடைந்தது. அப்பொழுது அக்கட்சியின் ஆரம்பகால உறுப்பினர் — முஸ்லிம்கள் உட்பட — தமது கட்சி விசுவாசத்தைத் திடீரென மாற்ற முன்வந்தார்கள். ஆனுல், டாக்டர் கலீல் தம்முடைய விசுவாசத்தை மாற்றவில்லை. ஐ தே. கட்சியின் வெற்றியிலும், தோல்வியிலும் அதனையே நேசித்தார். 'இறக்கும் வரை நானே தலைவன்' என்று தம்மைத் திணித்துக் கொள்ளாத இனிய பண்பாளர். இன்றுகூட அவர் விரும்பினுல் அமைச்சராகவோ, அன்றேல் இன்னும் உயர்ந்த பதவிகளிலோ ஒட்டிக் கொண்டிருக்கலாம். ஆனுல், அவற்றை ஒதுக்கி நிற்கும் பெருந்தன்மை ஏனைய தலைவர்களிடம் காணமுடியாத அற்புதக் குணமாகும். இத்தகையரான டாக்டர் கலீல் அவர்களுடைய படத்தை அட்டையிலே வெளியிடுவதில் இளம்பிறை பெருமையடைகின்றது.

இலங்கை முஸ்லிம் லீக் தலைவராக மீண்டும் கலீல் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் கௌரவிக்கும் முகமாக அவர் படத்துடன், அவருடைய சேவைகளைத் தொகுத்து ஒரு விசேட கட்டுரையும் பிரசுரிக்க நினைத்திருந்தோம். ஆனுல், நமது எண்ணம் பூரணமாகவில்லை. இதற்குக் காரணம் முஸ்லிம் லீக் அலுவலகத்தினர் லீக்கின் வரலாற்றையோ, டாக்டர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளையோ, மாவனெல்லையில் நிகழ்த்தும் தலைமைப் பேருரையின் நகலையோ தந்துதவ மறுத்து விட்டனர். தலைவர் புகழ் பார்மிசை பரவக்கூடாது எனக் கருமமாற்றும் பணிமனையை லீக் வைத்திருக்கின்றது என்பதையிட்டு இனப்பற்றும் — சுய கௌரவமுள்ள எந்த இஸ்லாமியனும் மகிழ மாட்டான். இந்த அசம்பாவிதப் போக்குக்கான காரணங்களை லீக் செயற் குழுவினர் ஆராய்ந்து, இப்போக்கினைக் களைவதுதான் தலைவர் டாக்டர் எம். ஸி. எம். கலீல் அவர்களுக்குச் செய்யும் உரிய மரியாதையாகும் என இளம்பிறை வற்புறுத்துகின்றது.




# 'இளம்பிறை'யின் அரசியல்

'இளம்பிறையில் இப்படியும் ஒரு திடீர்த் திருப்பமா? ஐயோ, அது அரசியலில் நுழைந்துவிட்டதே' என்ற அவலக்குரலொன்று— அவசரக்குரலொன்று எங்கேயோ ஒரு மூலையிலிருந்து நம் செவிகளிலே விழுகின்றது. இந்தக் குரலிலே வியாகூலம் கவிந்திருக்கின்றது; முனிவு செறிந்திருக்கின்றது.

'இளம்பிறை செய்யத் தகாததைச் செய்துவிட்டது' என்ற குரல் கட்சி அரசியற் சேற்றிலே சிக்குண்டவர்கள் வதியும் மூலையிலே இருந்துதான் கிளப்பப்படுகின்றது என்பதை நாம் அறிவோம். கட்சி அரசியல் மூலம் வியாபாரம் நடத்துபவர்கள் — வயிறு வளர்ப்பவர்கள் ஏனைய இனங்களில் இருப்பதைப் போலவே, முஸ்லிம் மக்கள் மத்தியிலும் வாழுகிறார்கள். அத்தகையவர்கள் இளம்பிறையின் கட்டுரை ஒன்றினால், தங்களுடைய உழைப்பிலேயும் — பிழைப்பிலேயும் மண் விழுந்துவிடும் என அஞ்சுவதாகத் தெரிகின்றது. நிழல் யுத்தத்தில் ஈடுபடுவதையே போராட்டமாகக் கருதும் போலிகளுக்கு இத்தகைய அச்சங்கள் தோன்றுதல் தவிர்க்கமுடியாததாகும். அவ்வாறு அஞ்சினோர்க்கு அபயமளித்தல் நமது நோக்கமல்ல.

இளம்பிறையின் தளத்தையும், அதன் இலட்சியப் பயணத்தையும் மீண்டுந் தெளிவு படுத்துதலே நமது நோக்கமாகும். நம்முடைய பணியை நாமே பிரஸ்தாபித்து எழுதக் கூச்சமாக இருக்கின்றது. இருப்பினும், '. . . தன்னை மறுதலை பழித்த காலையும் தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே' என்ற நன்னூற் கருத்தினை மீண்டும் வலியுறுத்தி, சில சொல்ல விழைகின்றோம்.

**இஸ்லாமிய பண்புகளைத் தமிழ் மக்கள் மத்தியில்**
**கொண்டுவருங் கலைத் தூதன் இளம்பிறையே!**
**தமிழ் இலக்கியச் சிறப்புகளை முஸ்லிம் மக்கள்**
**மத்தியிலே கொண்டுவரும் இலக்கியத்தூதனும்**
**இளம்பிறையே!**

—இவைகள் தம்மைப்பற்றி நாமே, நன்கு நிதானித்து, நியாய பூர்வமாகப் பிரகடனப்படுத்திய அபிப்பிராயங்களாம்.

இளம்பிறையின் முதலாவது பூ 1964 - ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்திற் பூத்தது. தமிழ் உணர்ச்சி, கலை-இலக்கியப் பற்று, இலட்சியப் பசி ஆகியனவே இளம் பிறையின் மூலதனங்களாக அமைந்தன. உணர்ச்சி மய மான இந்த மூலதனங்களுடன் நாம் இயற்றியுள்ள சாதனை இன்று நமக்கே வியப்பினை ஊட்டுகின்றது; நிறைவினைத் தருகின்றது.

மீலாத்—ஹஜ்—ரமலான் ஆகிய பண்டிகைகளிலே அதிக பக்கங்களைக் கொண்ட விசேட பூக்களாக இளம் பிறை மலர்ந்திருக்கின்றது. முஸ்லிம்களுடைய பெரு நாள்களிலே அவர்களுடன் பிணைந்து மகிழ்வு பருக விழையும் துடிப்பு என்றுமே இளம்பிறைக்கு இருந் திருக்கிறது. அதேசமயம், காலத்திற்குக் காலம் நாம் வெளியிட்ட 'கல்வி மலர்', 'சாகித்திய மலர்' ஆகியன காலத்தை எதிர்த்து நிற்கும் கருத்துக் கருவூலங்கள் என்பது தக்கார் கருத்தாகும்.

இளம்பிறை வெளிவரத் தொடங்கிய பின்னர் இஸ் லாமிய ஏடுகள் சில தோன்றி மறைந்திருக்கின்றன. அவை 'முஸ்லிம் பத்திரிகை' என்ற பெயரால் கட்சி அரசியல் என்ற சாயம் பூசப்பட்டே வெளிவந்தன. ஆனால் முஸ்லிம் மக்களுடைய வாழ்க்கையை முழுமையாக நேசித்து-தரிசித்து, தமிழ் மொழியின் கலை - இலக்கியப் பாரம்பரியத்தில் முற்றாகக் காலூன்றி, வெளிவந்து கொண்டிருக்கும் ஒரேயொரு முஸ்லிம் சஞ்சிகை இளம் பிறையே என்பதைச் சுயநலங்கள் கருதி நம்முடன் பகைமை பாராட்டுபவர்கள்கூட ஒப்புக்கொண்டே ஆக வேண்டிய பாரிய உண்மையாகும்.

இளம்பிறை இஸ்லாத்தையும் - மனிதனையும் முழு மையாக நேசிப்பதினால், சமுதாய வாழ்வில் ஊழலும் அநீதியும் தலைதூக்கும் பொழுது, துணிவு மிக்க அபிப்பி ராயங்களை வெளியிட அது தயங்கியதில்லை. இளம்பிறை யின் தலையங்கங்கள் எல்லாப் பிரச்சினைகளையும் தொட்டு நின்றன. மனிதனுடைய பிரச்சினைகள் எவையோ, அவை இளம்பிறையின் பிரச்சினைகளுமாம்.

இன்னு மொன்று. இஸ்லாத்தில், கலையாக இருந்தா லென்ன, இலக்கியமாக இருந்தாலென்ன, அரசியலாக இருந்தாலென்ன, அவை சமய அடிப்படையையும் தள மாகக் கொண்டன என்பதை எந்த இஸ்லாமியனும் அறிவான். அந்த அளவில், இஸ்லாம் கற்பிக்கும் அரசி யலைப்பற்றிப் பேச இளம்பிறைக்கு உரிமை இருக்கின்றது. இன்னொரு வழியிற் சொல்வதானால், இளம்பிறைக்குக் கட்சி அரசியலில் மோகம் கிடையாது; இஸ்லாத்தின்மீது தளராத ஈமான் உண்டு.

இதுதான் உண்மை. இந்த உண்மைகூட இஸ்லாத் தையும் கட்சி அரசியலையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பும் அரசியல்வாதிகளையும், அவர்களுடைய தரகர்களையும் மீண்டும் சுடலாம்!

## அ. இ. மு. லீக் அலுவலகம்:

# பொறுப்பற்ற போக்கு!

[டாக்டர் எம். ஸி. எம். கலீல் அவர்களுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு, 'இளம்பிறை'ப் பூவில் அவருடைய அட்டைப்படம் போடுவது பற்றியும், லீக் சம்பந்தமான கட்டுரை வெளியிடுவது பற்றியும் தெரி வித்தேன். அவர் மகிழ்ந்தார். அதற்கான சகல ஒத்து ழைப்புகளையும் தரும்படி கேட்டுக் கொண்டேன். அவற்றை மனமுவந்து தருவதாக ஒப்புக்கொண்டார். 'இளம்பிறை'யின் பிரதிநிதியை அனுப்புவதாகத் தெரி வித்த நான், அவ்வாறே பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைத்தேன். அவருடைய அனுபவத்தை, அவரே எழுதியுள்ளார். ஆ-ர்.]

மாவனெல்லையில் ஏப்ரல் 4-ம் திகதி நடைபெறும் முஸ் லிம் லீக் மாநாட்டினையொட்டி, முஸ்லிம் லீக் பற்றிய விடயங்களைச் சேகரித்து வரும்படியும், இளம்பிறை முகப்பு அட்டைக்கு டாக்டர் கலீல் அவர்களின் புகைப்படத்தை வாங்கி வரும் படியும் பணிக்கப்பட்டேன். அதற்கிணங்க 31-3-69-ம் நாள் சுமார் 12 மணியளவில், ஏலவே, நிர்வாக ஆசிரியர் தொலைபேசி மூலம் டாக்டர் அவர்களுடன் செய்து கொண்ட ஏற்பாட்டின் படி, அவரது இல்லம் சென்று, அவரைச் சந்தித்து, புகைப்படங் களைக் கேட்டேன். அவர் ஒரு புகைப்படத்தைக் கொடுத்தார். அதையும் பெற்றுக்கொண்டு வேறு தெளிவான புகைப்படத் தைத் தந்துதவும்படி கேட்டேன். அவர் இன்னொரு பெரிய படத்தை எடுத்து வந்தார். அது ஆகப் பெரிதாயிருந்தபடி யாலும், பிரேம் பண்ணப்பட்டிருந்ததாலும் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, லீக் பற்றிய விபரங்கள், தலைமைப் பேருரை, டாக்டரைப்பற்றிய விபரங்கள் முதலிய பிரசுரங்களைத் தரும்படி வேண்டினேன்.

அவைகள் தம்மிடம் இல்லையெனவும், லீக் அலுவலகத்தில் அச்சிடப்பட்ட சகல விபரங்களும் உள்ளன வென்றும், அங்கு சென்று பெற்றுக் கொள்ளும்படியும் சொன்னார். அவர் அநு மதியின்றித் தரமாட்டார்கள் எனக் கருதி, அறிமுகக் கடிதம் ஒன்று தந்துதவும்படி கேட்டேன். தேவையில்லையெனவும், கேட்டால் தருவார்கள் எனவும் தெரிவித்தார். தருவார்கள் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தத் தொலைபேசியிலாவது அவர் களுக்கு அறிவிக்கும்படி வேண்டினேன். டெலிபோன் செய்வ தாகச் சொன்னார். நான் கையோடு கொண்டு சென்ற சில இளம்பிறை இதழ்களை டாக்டர் அவர்களிடம் பார்வைக்காகக் கொடுத்து விடைபெற்றுக் கொண்டு, நேரில் லீக் அலுவலகம் சென்றேன். அங்குள்ள நிர்வாகஸ்தர் ஒருவரிடம் என்னை அறி முகம் செய்து கொண்டு, விபரங்கள் தந்துதவும்படி கேட்டேன். அவர் சில பிரசுரங்களையும், அழைப்பிதழ் ஒன்றையும் கொடுத் தார். ஆனால் அவற்றில் டாக்டரைப்பற்றிய — லீக்கைப்பற்றிய

விபரங்களோ, தலைமைப் பேருரையோ இல்லாதபடியால் இவை சம்பந்தமான விபரங்களைக் கேட்டேன். இவை அச்சில் இருப்பதாகவும் 3-ம் திகதி வரும்படியும், அன்று அவற்றினைத் தருவதாகவும் தெரிவித்தார்.

அதன்படி 3-ம் நாள் 10.45 மணியளவில் மீண்டும் லீக் அலுவலகம் சென்றேன். அதே உத்தியோகத்தரே அன்றும் இருந்தார். வேறு இருவரும் இருந்தனர். 'இளம்பிறை'யிலிருந்து வருகிறேன். என்று கூறியதுதான் தாமதம், "இளம்பிறைக்கு நாம் எவ்வித விபரங்களும் தரமுடியாது, லீக் வேக்கிங் கமிட்டி இளம்பிறைக்கு எவ்வித விபரங்களும் தரக்கூடாது என்று தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார். அஸ்வர் எனக்கு தெரிந்தவர். இதைப் பயன்படுத்தியாவது விபரங்கள் எடுக்கலாம் என்ற நம்பிக்கையில், தனிப்பட்ட விடயங்களுக்கு அவருடன் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதால் அவர் எங்கிருப்பார் எனவும் வினவினேன். அவர் தான் இவ்விதம் அறிவிக்கும்படியும், ஒரு தகவலும், விபரங்களும் இளம்பிறைக்குத் தர வேண்டாம் எனக் கூறியதாகவும் தெரிவித்தார். அஸ்வர் மீது தங்களுக்கு முழு நம்பிக்கையிருப்பதாகவும், அவரே மாநாட்டுக்கு பொறுப்பாயிருப்பதால், அவர் சொன்னபடி செய்வதாகவும், அவர் எங்கிருப்பார் என்பது தெரியாதெனவும், சிலவேளை தொழில் அமைச்சு அலுவலகத்திலும், இல்லாவிட்டால், லேக் ஹவுஸ் போன்ற அச்சகங்களில் இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

தங்களுக்கு பிரசாரத்திற்கு லேக் ஹவுஸ் போன்ற பிரபல பத்திரிகை நிறுவனங்களின் பத்திரிகைகள் இருப்பதாகவும், இளம்பிறை போன்ற பத்திரிகைகளின் பிரசாரம் தேவையில்லையெனவும் தெரிவித்தார். அதன்படி எவ்வித விபரங்களும் தரப்படாமலேயே நான் திரும்பினேன்.

★ ★ ★

நமது பிரதிநிதி சமர்ப்பித்துள்ள இந்த அறிக்கையின் பின்னணியில் சில விடயங்களை ஊகிக்க முடிகின்றது.

(1) டாக்டர் எம். ஸி. எம். கலீல் மிகுந்த பண்பாளர்; நல்லிதயம் படைத்தவர்.

(2) டாக்டர் கலீலின் புகழ் மேன்மேலும் பிரகாசிப்பதை லீக்கிலே இன்று புகுந்துள்ள சில சுயநல வாதிகள் விரும்பவில்லை.

(3) அமீனா புகுந்த வீடு போல, அல்லது ஆமை புகுந்த வீடு போல லீக்கிற்குள் ஜனாப் அஸ்வர் நுழைந்திருக்கிறார்.

— தொடர்ச்சி 10-ம் பக்கம்

# இலங்கை முஸ்லிம் லீக்:

## வரலாற்றுக் கண்ணோட்டம்

—மாலிக்

முஸ்லிம்களுக்கான ஓர் அரசியல் இயக்கம் ஈழத்தில் வெகு காலந் தாழ்த்தியே ஆரம்பமாகியது. இதற்கான காரணங்களை இப்பொழுது ஆராயப் புகுதல் கசப்பானதாகும். இருப்பினும், அந்நியர் ஆட்சிக்கு வாழிபாடும் போக்குடையவர்களாகவே முஸ்லிம்கள் வாழ்ந்தார்களெனப் பிழைபடக்கருதத்தேவையில்லை. போத்துக்கீசருடைய ஆட்சி ஈழத்திலே வேரூன்றுவதற்கு எதிராக வீரச் சமர் புரிந்தவர்கள் முஸ்லிம்களே என வரலாறு போற்றி நிற்கின்றது. அந்நிய ஆதிக்கங்களுக்கு எதிராகச் சுதேச மன்னர்கள் போரிட்ட காலத்திலெல்லாம் முஸ்லிம் மக்களுடைய பேராதரவு சுதேச மன்னர்களுடைய பக்கங்களிலேயே சடைத்திருந்தது. இந்நிலை பதினேழாம் நூற்றாண்டின் இறுதி வரை நீடித்திருந்தது என்பதும் கவனத்திற்குரியது.

1802 - ஆம் ஆண்டில் இலங்கை பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாகியது. 1815- இல் இலங்கை பூராகவும் பிரித்தானியருடைய ஆட்சிக்கு உட்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலிரண்டு தசாப்தங்களிலும் முஸ்லிம்கள் சுதேச மன்னர்களுக்கு மாறாக, பிரித்தானியரை ஆதரித்தனர் என்ற சில நிகழ்ச்சிகள் ஆங்காங்கு பரவிக்கிடக்கின்றன. இருப்பினும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே முஸ்லிம்கள் கொண்டிருந்த அரசியல் முயற்சிகளைப் பற்றிய விபரங்கள் துலக்கமாகத் தெரியவில்லை. இந்நிலை இருபதாம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தின்வரை நீடித்தது.

இருண்ட வானில் உதய தாரகை போன்று 1911 - ஆம் ஆண்டில் முஸ்லிம் மக்கள் மத்தியிலே அரசியல் விழிப்பு கனன்று கொண்டிருந்தது. இலங்கையின் மற்றும் இரண்டு பிரதான இனங்களான சிங்கள தமிழ் மக்கள் தொகையின் ஆங்கில மொழி கற்றோர் மத்தியில் அரசியற் சலுகைகள் பெறல் வேண்டுமென்ற எழுச்சி மனை கோலியிருந்தமையும், முஸ்லிம்கள் மத்தியில் அரசியல் ஆர்வம் வளர்வதற்குக் காரணமாக அமைந்தது. இந்த ஆர்வத்திற்கு ஓர் உருவம் கொடுப்பதுபோன்று 1911-ஆம் ஆண்டில் "இலங்கை முஸ்லிம் சங்கம்" நிறுவப்பட்டது. இச்சங்கம் அரசியல் போதம் கொண்ட நிறுவனமாக இயங்கத் தவறியது.

முஸ்லிம் இளைஞர்கள் மத்தியிலே தீவிரமான ஒரு போக்குத் தோன்றியது. முஸ்லிம்களுடைய கல்வி - சமூக - அரசியல் - மார்க்கத் துறைகளிலே விடிவு காணுதல் வேண்டுமென்ற எண்ணமும், அதனை

இத்தீவின் நானுபகுதிகளிலும் பிரசாரஞ் செய்தல் வேண்டுமென்ற எழுச்சியும் இத்தீவிரப் போக்கிலே கிளைவிட்டன. இவற்றின் முனைப்பாக, 1924-இல் 'யங் முஸ்லிம் லீக்' தோன்றியது. இதுவே முஸ்லிம்களின் ஏக அரசியல் நிறுவனமாகச் செயல் புரிந்தது. 'இளங் கன்று பயமறியாதது' என்பது போலத்தான் இதன் நடவடிக்கைகள் ஆரம்ப காலத்தில் அமைந்தன. 1924-இல் இனவாரித் தொகுதிகளிலிருந்து இலங்கைச் சட்டசபைக்கு மூன்று அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த அங்கத்தவர்களுடைய ஆதரவும், அநுபவம் வாய்ந்த முதிய தலைவர்களுடைய நல்லாசியும் தமது பணிக்கு இன்றியமையாதது என்பதை யங் முஸ்லிம் லீக்கர்கள் உணரத்தலைப்பட்டார்கள். முதியவர்களுடைய அத்தகைய ஆதரவும் கிட்டவே 'யங்' என்ற சொல்லை நீக்கி, முஸ்லிம் லீக் என்ற நிறுவனம் செயற்படத் தொடங்கியது.

சுதேச மக்களுக்கு ஆட்சியில் அதிக பொறுப்புகள் அளிக்கப்படல் வேண்டுமென்று சிங்கள—தமிழ் மக்கள் நடத்திய கிளர்ச்சிகளிலே முஸ்லிம் லீக் தன்னையும் பிணைத்துக் கொண்டது. நிலைமையைப் பரிசீலனை செய்து சிபார்சுகளைச் சமர்ப்பிக்க பிரித்தானிய அரசாங்கம் டொனமூர் கொமிஷனை அனுப்பி வைத்தது. அந்தக் கொமிஷனின் முன் முஸ்லிம் லீக்கர்களும், கிளைகளும் சாட்சியம் அளிக்க முன்வந்தன. முஸ்லிம்களுக்குத் தொகுதி வாரியான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதை லீக் அந்தக் காலத்திலேயே வற்புறுத்தியது.

டொனமூர் அரசியல் திட்டத்தின்கீழ், சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடந்து முடிந்ததும் பொதுவாக முஸ்லிம்களுக்கும், குறிப்பாக லீக்கர்களுக்கும் ஏமாற்றமே காத்திருந்தது. இனவாரித் தொகுதிகளிலிருந்து மூன்று முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது மாறி, தொகுதிவாரி அடிப்படையில் ஒரேயொரு முஸ்லிம் — அதுவும் கிழக்கு மாகாணத்திலிருந்து — தேர்ந்தெடுக்கப்பட்ட நிதர்சனத்தை உணர்ந்தார்கள்.

இதனையிட்டு அதிருப்தியடைந்த முஸ்லிம் லீக், தூதுக்குழு ஒன்றை லண்டன் மாநகருக்கு அனுப்பிவைத்தது. அத்தூதுக் குழுவில் ஜனுப்கள் டி. பி. ஜாயா, அப்துல் காதர், எம். எம். மஹ்ரூப், குலாம் ஹுஸைன் ஆகியோர் அங்கத்துவம் வகித்தனர். இத்தூதுக்குழு பாராளுமன்றக் குழுவினைச் சந்தித்து தமது நிலையினை விளக்கிய போதிலும், இராஜாங்க அமைச்சர் (Secretary of State) டொனமூர் அரசியல் அமைப்புச் செயற்பட நியாயமான கால அவகாசம் கொடுக்கப்படல் வேண்டுமென்ற நியாயம் கற்பித்து, லீக்கின் தூதுக்குழுவுக்குக் கை விரித்துவிட்டார்.

இதனால் மனமுடைந்துவிடாது முஸ்லிம்களுடைய கல்வி—சமுதாய நலன்களுக்காக அக்கால முஸ்லிம் லீக் பணிபுரிந்து வந்தது. முஸ்லிம் பாடசாலைகளை அங்கீகரிக்கும்படி செய்தமை, அத்தகைய பாடசாலைகளில் மௌலவிகளை நியமிக்கும்படி செய்தமை, அழுத்கமை—அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இரண்டினை நிறுவச்

செய்தமை, முஸ்லிம் விவாக—விவாகரத்துச் சட்டத்தை உருவாக்கியமை, போலாவையில் முதலாவது முஸ்லிம் குடியேற்றத் திட்டத்தை அமுலாக்கியமை ஆகியன லீக் இடைக்காலத்திலே சாதித்த சாதனைகளெனலாம்.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்ததும் பிரித்தானிய அரசாங்கம் ஸோயல் கமிஷன் ஒன்றை அனுப்பி வைத்தது. பெரும்பான்மை சமூகத்தினரும், மந்திரி குழுவும் இக் கமிஷனைப் பகிஷ்கரித்த போதிலும், லீக் இதற்கு முன்னல் தோன்றிச் சாட்சியமளிக்கப் பின் நிற்கவில்லை. முஸ்லிம் பெருந்தொகையினராக வாழும் இடங்களில் முஸ்லிம்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் தொகுதிகள் நிர்ணயிக்கப்படல் வேண்டுமென கேட்டுக்கொண்டது. மட்டக்களப்பு மாவட்டத்திலும், கொழும்பு, பேருவலை புத்தளம் ஆகிய இடங்களிலும் அத்தகைய தொகுதிகள் ஏற்படுத்தப்படலாம் என ஒப்புக் கொள்ளப்பட்டது.

பின்னர், இலங்கையின் அரசியல் நிகழ்ச்சிகள் வேகமாக முன்னேறின. சோல்பரி அரசியல் அமைப்பு வெற்றிகரமாக இயங்குவதற்கு அரசியற் கட்சிகள் அமைக்கப்படுதல் இன்றியமையாதது ஆகியது.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராகும் வாய்ப்புப் பெற்ற டி. எஸ். சேனநாயக்கா அவர்களின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனுடன் சிங்கள மகாசபையும் இணையத் தீர்மானித்தது. அப்படியே முஸ்லிம் லீக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைதல் வேண்டுமென்ற அப்பிராயமொன்று எழுந்தது. இதனைப் பரிசீலனை செய்வதற்காக 'ஜீலானி மன்ஸில்' என்னும் பணிமனையில் லீக்கர்கள் கூடினார்கள். அக்கூட்டத்திற்கு சர் முஹம்மது மாக்கான் மாக்கார் தலைமை தாங்கினார்கள். அதிலே, ஐ. தே. கட்சியும் லீக்கும் சேர்ந்து இயங்குவதை சர் மாக்கான் மிகவும் தீர்க்கதரிசனத்துடன் எதிர்த்தார். ஆனல், பெரும்பான்மை உறுப்பினர் வேறு விதமாகத் தீர்மானித்தபடியால் ஐ. தே. கட்சியின் அமைப்பு உறுப்பாக இயங்குதல் தவிர்க்கமுடியாததாக மாறியது.

'பாம் கோர்ட்'டில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் லீக்கின் பிரதிநிதிகளாக டாக்டர் ரி. பி. ஜாயா, டாக்டர் எம். ஸி. எம். கலீல், ஜனுப்கள் எம். ஏ. ஸி. எம். சாலிஹ், ஓ. எல். எம். சம்சுதீன், பழீல் ஏ. கபூர், எம். ரி. மரைக்கார் பாவா, எம். எச். சூபி இஸ்மாயில், எம். எச். ஆமித், எம். எச். அஹ்மத் ஆகியோர் கலந்து கொண்டார்கள். காமம் செப்பாது, வரலாறு எழுதுவதாயின் இந்த இணைப்புடன் முஸ்லிம் லீக் முஸ்லிம்களுடைய ஏக அரசியல் சக்தி என்ற மகத்துவத்தை இழந்தது.

லீக் தனியாக இயங்காத காரணத்தினல் பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேற்றுவதை எதிர்க்க இயலாது போயிற்று. இதன் காரணமாக ஏராளமான இந்திய பாகிஸ்தானிய முஸ்லிம்கள் பிரஜா உரிமை இழந்ததுடன், இலங்

மையைத் தம் தாயகமாகக் கொண்ட முஸ்லிம்கள் சொல்லொணு இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். லீக் இது சம்பந்தமாகக் கூட்டங்கள் பல நடத்தியதோடு தனது தொண்டினை முடித்துக் கொண்டது.

ஐ. தே. கட்சியுடன் லீக் தன்னை இணைத்துக் கொண்டமையினுல் முஸ்லிம்கள் முற்ருக நன்மை பெறவில்லை என்று கூற முடியாது. பல்வேறு கட்டங்களில் லீக்கின் தலைவர்களாகத் தொண்டாற்றிய டாக்டர் ரி. பி. ஜாயா, டாக்டர் எம். ஸி. எம். கலீல் ஆகியோர் அமைச்சர்களாகப் பணிபுரிந்துள்ளார்கள். அவர்களுடைய அடிச்சுவட்டில் இப்பொழுது எம். எச். முஹம்மதுகூட அமைச்சராகப் பணி புரிகின்ருர்!

---

— 6-ம் பக்கத் தொடர்ச்சி

(4) ஏரிக்கரை நிறுவனத்திற்கும் அஸ்வருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது.

(5) ஏரிக்கரைப் பத்திரிகை கைவிட்டால், இங்நாட்டில் முஸ்லீம் அபிப்பிராயத்தை உருவாக்க முடியாது என ஒருவகைத் தாழ்வுச் சிக்கல் வளர்க்கப்பட்டிருக்கின்றது.

(6) 'இளம்பிறை' லீக்கர்கள் மீது நேச மனப்பான்மை கொண்டிருக்க, அஸ்வர் ஏதோ தனிப்பட்ட கோபத்தின் வசப்பட்டோ, அன்றேல் தனிப்பட்ட ஆதாயத்தின்மீது கண்வைத்தோ 'இளம்பிறை'யைப் பற்றி லீக்கர்கள் மத்தியில் தவருன கருத்துக்களை பரப்புகின்ருர்.

ஆனுல், நமக்கு விளங்காதது ஒன்றுதான். முஸ்லிம் லீக் செயற் குழு **(Working committee)** இளம்பிறைக்கு விடயங்கள் கொடுக்கப்படலாகாது எனத் தீர்மானித்ததா? அன்றேல், லீக் செயற் குழுத் தீர்மானங்களைத் தன்னிச்சையாகவே எடுக்கும் அதிகாரம் அஸ்வருக்கு வழங்கப்பட்டதா? வானெலி நடிகர், சினிமாச் செய்தி எழுத்தாளர் இலங்கை முஸ்லிம் லீக்கில் வகிக்கும் பதவி, டாக்டர் கலீல் வகிக்கும் பதவியிலும் முக்கியமானதா?

# லீக் அங்கும் இங்கும்

ஒப்பு நோக்குக் கட்டுரை

இலங்கை முஸ்லிம் லீக் இன்று (4-4-69) மாவனெல்லையில் கூடுகின்றது. மாநாடு நடத்திக் கலைந்ததாக இல்லாமல், அவர்களுடைய சிந்தனை விரிவு பட்டு, செயல் திறன் அகலித்தல் வேண்டும் என்பது நமது ஆசையாகும். ஆசை அரசியல் தொற்றி எழுந்ததல்ல; எம்மினத்தின் முன்னேற்றங் கருதி முளை கொண்டது.

இந்நேரத்தில், இலங்கையின் முஸ்லிம் லீக்கர்கள் தமிழ்நாடு முஸ்லிம் லீக்கிடமிருந்து பயனுள்ள சில பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். பாரத நாட்டின் சுதந்திர போராட்ட காலத்தில் முஸ்லிம் லீக் 'பாகிஸ்தான்' என்ற தனி முஸ்லிம் நாடு கோரிக்கையை முன்வைத்தது. வடக்கில் வாழ்ந்தாலென்ன தெற்கில் வாழ்ந்தாலென்ன முஸ்லிம் லீக்கர்கள் இக்கோரிக்கையை ஒரு முகமாக ஆதரித்தனர். ('ஏக இந்தியாவில் — கூறுபடுத்தப்படக் கூடாத இந்தியாவில் — சரிசமமான உரிமைகளுடன் முஸ்லிம்கள் வாழவேண்டும்' என்ற கொள்கையை மௌலானா அபுல் கலாம் ஆஸாத்தின் தலைமையில் கணிசமான முஸ்லிம் மக்கள் ஆதரித்தனர் என்பது வேறு பிரச்சினை.)

சுதந்திரம் வந்தது. பாகிஸ்தான்— உலகின் மிகப்பெரிய முஸ்லிம் நாடு—வட இந்தியாவிலே தோன்றி, உலகப் படத்தை மாற்றி அமைத்தது. வட இந்தியாவில், பாரதநாட்டுப் பிரதேசங்களாக வந்த பகுதிகளிலே வாழ்ந்த முஸ்லிம் மக்களால், புதிய பாகிஸ்தானில் சென்று குடியேறும் வசதிகள் இருந்தன. பல்வேறு காரணங்களினால், தெற்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்களினால் பாகிஸ்தானுக்குச் சென்று குடியேறுதல் சாத்தியமற்றதாகியது. காங்கிரஸ் கட்சி பட்டாணியர்களை அனாதைகளாக விட்டதைப் போன்றதே, தென்னாட்டு முஸ்லிம்களின் நிலையும். பாகிஸ்தானின் நிர்வாகப் பதவியை ஏற்க விரைந்த ஜின்னா, பெயரளவில் எஞ்சிய முஸ்லிம் லீக்கிற்கு இஸ்மாயில் சாகிபை காயிதே மில்லத் தாக்கி, தலைவராக நியமித்துச் சென்றார்.

புதிய சூழ்நிலைகளைத் தெளிந்து கொள்வதற்குக் காயிதே மில்லத்தைத் தலைவராகக் கொண்டு இயங்கிய லீக்கிற்குப் பல ஆண்டுகள் பிடித்தன. பின்னர் தெளிவான பார்வையுடன் முஸ்லிம் லீக்கினைத் தென்னாட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தனித்து இயங்கவல்ல, தனித்துவக் கொள்கையும் இலட்சியமுமுள்ள கட்சியாக அமைத்தனர். (அதனுடைய வளர்ச்சிக் கட்டங்களை, இப்பூவின் பிறிதோர் இடத்திற் பிரசுரமாகியுள்ள 'தமிழ்நாடு முஸ்லிம் லீக் விவகாரம்' என்ற பகுதியிற் படித்துத் தெளிக.) தனித்த ஒரு கட்சியாக, பிறிதொரு பெரியகட்சியின் உறுப்பு இயக்கமாக அல்லாமல், இயங்குவதிலுள்ள நன்மைகளை லீக்கினால் அறுவடை செய்ய முடிந்தது.

கேரள அரசியலில் முஸ்லிம் லீக் சிறிய கட்சியாக இருப்பினும், ஆட்சிகளை அமைப்பதில் பெரும் பங்கு கொண்டு உழைத்தது. கேரள அரசியலில் பிறிதொரு சிறிய கட்சியாகத் தோன்றும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தலைவ

ரான பட்டம்தானுப்பிள்ளை யை கேரள முதலமைச்சராக்குவதில் முஸ்லிம் லீக் பிரதான பங்கெடுத்துக் கொண்டது. அரசியல் சூழ்நிலைகள் கேரளாவில் மாறின. ஈ. எம். சங்கரன் நம்பூதிரிபாட்டின் தலைமையில் இயங்கும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியுடன் தோழமை பூண்டு புதிய ஆட்சியை ஏற்படுத்துதல் உகந்ததென லீக் தீர்மானித்து. இந்தத் தீர்மானத்தின் பெறுபேறாக இடதுசாரி கம்யூனிஸ்ட் ஆட்சி கேரளாவில் ஏற்பட்டுள்ளதுடன், முஸ்லிம் லீக்கரான முஹம்மது கோயா கல்வி அமைச்சராகப் பணி புரியவும் முடிகின்றது.

தமிழ்நாட்டில் தி. மு க. வுடனும், கம்யூனிஸ்டுகளுடனும் கூட்டுச் சேர்ந்து நீண்ட காலம் நிலைத்து நின்ற காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்துவதில் லீக் வெற்றி கண்டது.

துர்ப்பாக்கிய வசமாக முஸ்லிம் லீக்கிற்குள் புகுந்து கொண்ட உட்கட்சிப் போராட்டத்தினுல், புதுவை ராஜ்யத்திற்கான உப தேர்தலில், முஸ்லிம் லீக் புதிய வெற்றிகளை ஈட்டத் தவறியதுடன், இருந்த அசெம்பிளித் தொகுதியையும் கோட்டைவிட்டது. இல்லாவிட்டால், புதுவையின் புதிய அமைச்சரவையில் இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கு அல்ல, முஸ்லிம் லீக்கர்களுக்கே அமைச்சரவையில் இடம்பெறும் முதல் வாய்ப்பும் கிட்டியிருக்கும்

இலங்கையின் முஸ்லிம் லீக் தனியான அரசியற்கட்சியாக இயங்காமல், ஐ. தே. கட்சியின் உறுப்பாக இயங்குவதினுல் அடைந்த — அல்லது அடையும் — பயன் என்ன? எப்பொழுதும் தொழில் அமைச்சர் பதவி முஸ்லிம் ஒருவருக்காகக் காத்துக் கிடக்கும். அவ்வளவுதான். அது ரி. பி. ஜாயாவாக இருந்தாலென்ன, டாக்டர் எம். ஸீ. எம். கலீலாக இருந்தாலென்ன, எம். எச். முஹம்மதுவாக இருந்தாலென்ன தொழில் அமைச்சே முஸ்லிம் பெருமகனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ரி. பி. ஜாயா தொழில் அமைச்சின் மந்திரியாகியதிலிருந்து, எம். எச். முஹம்மது தொழில் அமைச்சராக இருக்கும் இன்றுவரைக்குமிடையில் இரண்டு தசாப்தங்கள் சென்றுவிட்டன. இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் முன்னேறவில்லையா? முஸ்லிம் லீக்கின் இலட்சியமும் நோக்கமும் தொழில் அமைச்சர் பதவி மட்டுமே என்று சுருங்கிவிட்டதா? 'இளம்பிறை' கூறுகின்றதே என வெகுண்டெழுவதில் அர்த்தமில்லை. யார் சொன்னுன் என்பது அல்ல முக்கியம். சொல்லப்பட்ட கருத்துச் சரியா எனத் தெளிதலே விவேகஞ் சார்ந்தது. இதனை உன்னி, லீக்கர்கள் இனியாவது சிந்தித்துச் செயலாற்றுவார்களாக. இல்லையேல், முஸ்லிம் மக்கள் மத்தியிலே உருவாகிவரும் இளைய சக்தியினர் வேறுவழிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். இதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தோன்ற ஆரம்பித்துவிட்டன.

அமைச்சர் பதவிதான் குறிக்கோள் எனில், லீக்கினுடைய ஆதரவும், அநுசரணையுமில்லாமல் அமைக்கப்பட்ட அமைச்சரவைகளில் தபால்-தந்தி, கல்வி, சுகாதாரம், நிதி, நீதி, வர்த்தகம் ஆகிய அமைச்சர் பதவிகளை முஸ்லிம்கள் அலங்கரித்திருக்கின்றனர் என்பதும் கவனத்திற்குரியது.

இலங்கை முஸ்லிம் லீக்கர்கள் மாவனெல்லை மாநாட்டிலிருந்து திரும்பியதும் இவ் விடயங்களை யிட்டுச் சிந்திப்பார்களாக! இக்கட்டுரை சம்பந்தமாக 'இளம்பிறை' வாசகர்களுடைய அபிப்பிராயங்களை அறிய விரும்புகின்ருேம்.



விபூதிப் பூச்சுடனும், செவியில் பூவுடனும் நண்பர் ஆசாரமாக வந்து சேர்ந்தார். பேச்சு ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவி நேரம் போனதே தெரியவில்லை. 'சாப்பாட்டிற்குப் பின்னர் உங்கள் சமாவை வைத்துக் கொள்ளலாமே' என்று சமையலறை டிப்பாட்மெண்டிலிருந்து குரல் வந்தது. வீட்டில் என்னைத் தவிர வேறு யாரும் 'தொடாத' மான் இறைச்சிக்கறியின் 'டிஸ்' ஞாபகம் வரவே, சாப்பிட வேண்டுமென்ற விருப்பம் மேலோங்கியது. 'நீங்கள் இன்றைக்கு என் வீட்டில் சாப்பாடு வைத்துக் கொள்ளலாமே' என்று நண்பரையும் அழைத்தேன். செவ்வாய்க் கிழமையில் தாம் ஒரு நேரச் சாப்பாடு என்ற விஷயத்தைக் கூறி, செவ்வாய்க்கிழமைகளில் நண்பரின் வீட்டில் தண்ணீர் அருந்தினாலும் உறவு பங்கத்தில் வந்து முடியுமென்றார். தொடர்ந்து செவ்வாய் தோஷம், செவ்வாய் பார்வை முதலியவற்றையும் விண்டு காட்டினார். தமிழ்ப் புராண சினிமாப் படங்களில் சந்திரன், சூரியன் எல்லாம் மானிடராகக் காட்சி அளித்துச் செல்கின்றார்களல்லவா? அப்படியே செவ்வாயும் இந்நேரம் மானிட ரூபமெடுத்திருந்தால், என் நண்பரின் பேச்சினால் தும்முதும்மென்று தும்மித் தீர்த்திருப்பார். இதனால், செவ்வாயின் பார்வை இன்னும் வலு கோரமாக மாறியிருக்கும். எனக்குப் பயமில்லை. அந்தப் பார்வை என்னை ஒன்றும் செய்துவிட மாட்டாது. எனக்கு 'வெள்ளி துலாவிலே' என்று தாயார் அடிக்கடி சொல்லுவார். எந்தத் துலா என்ற ஆராய்ச்சி நமக்கு ஏன் என்று விட்டுவிட்டேன். அடுத்த அப்பலோ கப்பல் அநேகமாக சந்திரனில் மானிடனைக் கொண்டுபோய் இறக்குமாம். சந்திரனில் மானிடர் குடியேறி வசிப்பதற்கு வாய்ப்பில்லை. செவ்வாயில் குடியேறி வாழும் வசதிகள் இருக்கக்கூடும் என விஞ்ஞானிகள் சிலர் கருதுகின்றனர். 'அப்படிக் குடியேறி சந்ததி பெருக்கி வாழத் தொடங்கினால்...'— இவ்வாறு என் கற்பனை நீண்டது. அங்கு பிறக்கும் குழந்தைகளுக்கு எவ்வாறு செவ்வாய் தோஷமும், செவ்வாய் பார்வையும் ஏற்படும்? அல்லது பூமி தோஷமும் பூமி பார்வையும் அந்தக் கிரகத்திற் பிறக்கும் மக்களைப் பீடிக்குமா? இதனை எந்த விண்ணான விஞ்ஞானியாலும் கணிக்க முடியாது. எனவே, செவ்வாயில் குடியேறும் முதலாவது கோஷ்டியுடன் இரகுநாதையர் வாரிசு ஒருவரும் இடம் பெறல் வேண்டும். இந்த சிபார்சினை அமெரிக்காவுக்கா, ரஷ்யாவுக்கா அனுப்பி வைப்பது என்ற விசாரம் ஏற்பட்டது. அதற்கிடையில், 'விளக்கை அணைச்சிட்டு நான் படுக்கட்டே?' என்று சமையல் டிப்பார்மெண்டிலிருந்து இறுதி எச்சரிக்கை வந்தது!

## முஸ்லிம் லீக் பொருளாளர் பற்றி

# புகழுரைகள் சில

தமிழ் நாடு முஸ்லிம் லீக்கிலிருந்து தை. அ. செ. அப்துல் காதரைத் திட்டமிட்டு வெளியேற்றிய பின், அவரைப் போற்றியவர்கள் மறைமுகமாகவும், பகிரங்கமாகவும் தூற்ற முற்பட்டுள்ளார்கள். தூற்றுபவர்கள் கோஷ்டியில் முன் நிற்பவர் 'பழைய' மணிவிளக்கு ஆசிரியர் ஆ. கா. அப்துஸ் ஸமது என்று அறிய முடிகின்றது.

ஆ. கா. அப்துல் ஸமது இடையில் நிறுத்தப்பட்ட மணிவிளக்குப் பத்திரிகையிலும், பல பொதுக் கூட்டங்களிலும் தை. அ. செ. வை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டியிருக்கின்ருர். கீழக்கரை லீக் கிளை மாநாட்டில் பேசும் பொழுது மணித்தியாலக் கணக்காக தை. அ. செ. வின் புகழ் பாடிய அவர், மணிவிளக்கில், 1960-ம் ஆண்டு மாநாட்டினை நினைவு கூர்ந்து, "இந்த மாநாடு சிறப்பாக நடப்பதற்கு தை. அ. செ. அவர்களே காரணகர்த்தா. 1960-ம் ஆண்டு மாநாட்டைக் குறைவின்றி நிறை செய்தவர் தை. அ. செ. என்பது எனக்கும் மற்றவர்களுக்கும் நன்கு தெரியும்" என்று எழுதினர்.

முஸ்லிம் லீக் பெருந்தலைவர் காயிதே மில்லத், தமது பொருளாளர் தை. அ. செ. பற்றி கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் பாராட்டத் தவறியது கிடையாது. 1964-ம் ஆண்டு திருச்சியில் உள்ள சிலர் தை. அ. செ. எப்படிப்பட்டவர் என்ற கேள்வியை மில்லத்திடம் எழுப்பினர்கள். அப்பொழுது அவர் "லீக்கில் என்னை எப்படி நம்புகின்றீர்களோ, அப்படியே அவரையும் நம்புங்கள்" என்ருர்.

சென்னை மேலவை உறுப்பினராக இருக்கும் அப்துல் வஹாப் ஜானி கடைய நெல்லூரில் ஒரு கூட்டத்தில், 1966-ம் ஆண்டு பிற்பகுதியில் பேசும் பொழுது, "கீழக்கரை தை. அ. செ. அப்துல் காதர் எமது பொருளாளர். உண்மைதான். தோழமைக் கட்சிகளின் கூட்டு தமிழ் நாட்டில் பதவிக்கு வருமாயின் முஸ்லிம் லீக் அவரை மேலவை உறுப்பினராக்கித் தமிழ் நாட்டின் நிதி அமைச்சராக்கும் வண்ணம் சிபார்சு செய்யும்" என்ருர்.

கடந்த மீலாத் விழாக்களில் உரை நிகழ்த்துவதற்காக இலங்கை வந்த மதுரை எஸ். எம். ஷெரீப எம்.பி. நமக்களித்த பேட்டியில், தை. அ. செ. வை எச்சரிப்பதாகக் கூறிச்



தை. அ. செ. கொழும்பில் நடைபெற்ற இலக்கிய விழாவிலே உரையாற்றுகின்ருர்.

நிதி பற்றி

நான் தி. மு க. வின் 'நிதி' என அறிஞர் அண்ணாவாலும், கழகத் தோழர்களாலும் அன்பாக அழைக்கப் படுகின்றேன். எனக்கு அடுத்துப் பேசவிருக்கும் தை. அ. செ. அப்துல் காதர் தமிழ்நாடு முஸ்லிம் லீக்கின் பொருளாளர். இவரை இப்படி அறிமுகப்படுத்துவதிலும் பார்க்க, முஸ்லிம் லீக்கிற்குக் கிடைத்த பெரும் நிதி கீழக்கரை தை. அ. செ. என்று கூறுவதே பொருந்தும்.

—இப்படிக் கூறியவர் தி. மு. கழகத்தின் பொருளாளரும், தமிழ்நாட்டின் இன்றைய முதல்வருமான கலைஞர் மு. கருணாநிதி ஆவர்.

'நிதி'

சென்றார். இதே ஷெரிப் எம்.பி. 1967 முற்பகுதியில் தை. அ. செ. தலைமையில் இராமனாத புரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், (இக்கூட்டத்திற்கு அமைச்சர் கோவிந்தசாமியும் சமூகம் கொடுத்திருந்தார்) "சீதக்காதி பற்றிக் கேள்விப்பட்டிருக்கின் றோம்; படித்திருக்கின்றோம். நேரில் பார்த்ததில்லை. ஆனால், இன்று முஸ்லிம் லீக்கில் ஒரு சீதக்காதி இருக்கின்றார். இவரும் கொடுத்துக் கொடுத் துக் கை சிவந்த சீதக்காதிதான். அவர் வேறு யாருமல்ல. உங்கள் தை. அ. செ. அவர்களே தான்" என்று கூறினார்.

இவர்கள் தான் இன்று தை. அ. செ. அப்துல் காதரைக் கூட்டங்கள் மூலமாகவும், 'உரிமைக்குரல்' வாயிலாகவும் திட்டுகின்றார்கள்.

இந்த இரட்டை நாக்குக் காரர்களின் பிரசாரம் எத்தனை நாள்களுக்கு நிலைத்து நிற்கப் போகின்றது என்பதுதான் இன்று எழுந்துள்ள கேள்வி.

---

## அமைச்சர்

## எம். எச். முஹம்மது அவர்களுக்கும்

'இளம்பிறை'க்கும் இடையில் இருந்த
நீண்ட உறவுகள் பற்றிய
விசேடக் கட்டுரை
(புகைப்படங்கள் பலவற்றுடன்)
அடுத்த பூவிற்
பிரசுரமாகும்.

தமிழ்நாடு முஸ்லிம் லீக் விவகாரம்:

# பொருளாளர் நிலை என்ன?

தமிழ்நாடு முஸ்லிம் லீக்கிற்குள் நடைபெற்றுவரும் அடாத செயல்கள் பற்றிய அந்தரங்கத் தகவல்கள் பலவற்றைத் தருவதில் 'இளம் பிறை' முன்னணியில் திகழுகின்றது என்பதை யாவரும் அறிவர். 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்ற மனோ நிலை லீக்கின் எதிரிகளுக்கு இருக்கலாம். ஆனால், லீக்கின் முக்கிய உறுப்பினர் மத்தியில் உருவாகியுள்ள சுயநல விரோத குரோதங்கள் முற்றாகக் களையப்பட்டு, லீக் சேமமுடன் முஸ்லிம்களுடைய உயர்ச்சிக்காகப் பாடுபடல் வேண்டுமென்பது தான் 'இளம்பிறை'யின் வேணவாவாகும். இந்த அந்தரங்க சுத்தியுடன், தன்மானமும் இனப்பற்றுமுள்ள முஸ்லிம்கள் முன்னிலையில் நேர்மையான தகவல்களை முன்வைப்பதில் 'இளம் பிறை' முந்தி நிற்கின்றது.

சென்னையிலிருந்து வெளிவரும் 'ஜெயபேரிகை' என்ற காங்கிரஸ் தினசரி தனது 2-2-69 தேதியிட்ட இதழில் 'முஸ்லிம் லீக் கணக்கு நீதிமன்றம் ஏறும்?' என்ற மகுடத்தில் தலையங்கம் ஒன்று தீட்டியுள்ளது.

'முழுப்பாய் சுருட்டிகளின் — முடிச்சு மாறிகளின் பங்குத் தகராறின் விளைவாக — பதவி ஆசையின் காரணமாக முஸ்லிம் லீக் லிமிடெட் கம்பெனியின் சரித்திரம் சந்தி சிரிக்கப் போகின்றது.'

—இவ்வாறு எடுத்த எடுப்பிலேயே தகாத வார்த்தைகளை லீக்கின் மீது அள்ளி விசியிருக்கிறது 'ஜெயபேரிகை'த் தலையங்கம். வசை புராணம் பாடி முடித்திருக்கின்றது. அதிலே காணப்படும் தகவல்கள் உண்மையானால், தமிழக முஸ்லிம்களின் ஒரேயொரு அரசியல் இயக்கமான முஸ்லிம் லீக் செங்குத்தான வீழ்ச்சிப் பாதையிலே திடீரென்று விழுந்துவிட்டது என்றுதான் அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிலை கண்டு முஸ்லிம்கள் சிரிக்க முடியாது; கை கட்டி வாளாவிருக்கவும் முடியாது.

'முஸ்லிம் லீக் லிமிடெட் கம்பெனியில் தனக்காக எதையும் செய்யாதவர் — தன்னுடைய பெரும் பகுதி பணத்தை முஸ்லிம் லீக்கின் வளர்ச்சிக்காக செல

விட்டவர் அதன் பொருளாளர் ஒருவர்தானும்.'

—இப்படியும் ஒரு வாசகம் வருகின்றது ஜெயபேரிகையின் தலையங்கத்தில். இப்படிச் சாட்டப்படுபவர் முஸ்லிம் லீக்கின் 'தடை விதிக்கப்பட்ட' பொருளாளரான தை. அ. செய்யது அப்துல் காதர் அவர்களாவர். அவர் அண்மையில் ஈழம் வந்திருந்தார். சென்ற ஆண்டின் மீலாத் விழாக்களிலே பங்குபற்றத் தளபதி மொஹிதீன் வந்திருந்த பொழுது தை. அ. அவர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. எனவே, அந்த அறிமுகத்தை வைத்துக் கொண்டு அவருடன் 'இளம் பிறை' ஒரு பேட்டி நடத்தியது.

மேற்படி பேட்டியின் சாரமல்ல இக்கட்டுரை. இன்றுகூடத் தன் சொந்த அவமானங்களைப் பெரிது படுத்தாது, கட்சியின் நலன் கருதிப் பல அந்தரங்கத் தகவல்களை வெளியிடக் கூச்சப்படும் போக்கினை தை. அ. அவர்களிடம் அநுமானிக்க முடிந்தது. முஸ்லிம் லீக்கின் வரலாற்று ஞானத்துடன் நாம் எழுப்பிய கேள்விகள், அவர் தந்த பதில்கள், சாதித்த மௌனங்கள் ஆகியவற்றின் அடிப்படையாகக் கொண்ட விமர்சனக் கட்டுரையாகவே இஃது அமைந்துள்ளது.

தமிழ்நாடு முஸ்லிம் லீக் பிளவுபட்டுச் சரியாக அரை ஆண்டு பூர்த்தியாகி விட்டது. அக்டோபர் 2-ஆம் 3-ஆம் நாட்களில் லீக்கின் காரியக்கமிட்டி கூடியது. 3-ஆம் நாள் லீக்கின் ஒளி வீசும் மாணிக்கங்களான முக்கிய உறுப்பினர் எழுவரை 'சஸ்பென்ட்' செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. லீக்கின் உயிர் மூச்சினையே திருகும் மேற்படி தீர்மானத்தினுல் இழைக்கப்பட்ட தவறுகளைத் திருத்தும் வகையில் இற்றைவரை எந்த உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கப்படாததையிட்டு விசனப்படாத எந்த ஒரு முஸ்லிமும் இருக்கமுடியாது.

லீக்கின் பொருளாளர் தை. அ. செ. மீது தடைவிதிக்கப்பட்டு அரை ஆண்டு கடந்துவிட்டபோதிலும், அவருடைய இடத்திற்குப் பதிலாள் நியமிக்கப்படவில்லை. இவ்வளவு நீண்ட காலத்திற்கு ஒரு பொருளாளர் இன்றி ஓர் அரசியற் கட்சியால் ஸ்தாபன ரீதியாக இயங்க முடியுமென்று நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடிவில்லை. தை. அ செ. வின் இடத்தை நிரப்புவதில் லீக்கின் காரியக் கமிட்டி ஒரு நிச்சயமற்ற போக்கினைக் கடைப்பிடிக்கின்றது. அக்டோபருக்குப் பின்னர் கூடிய காரியக் கமிட்டிக் கூட்டங்களில் இப் பிரச்சினை எழுப்பப்பட்ட போதிலும், முடிவு எடுப்பது ஒத்திவைக்கப்பட்டு விவகாரம் றப்பராக நீள்கின்றது!

பொருளாளரின்றி லீக்கின் நிதியோட்டம் என்ற நரம்பு செயலிழந்துள்ளது என்பதை தை. அ. செ. வின் அரசியல் விரோதிகள்கூட ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். பாங்கிலே போடப்பட்டிருக்கும் லீக்கின் நிதி அப்படியே முடங்கிக் கிடக்கின்றது. இதனுல், பல முக்கிய விடயங்களை உடனுக்குடன் முடிக்க இயலாத நிலை லீக்கிற்கு ஏற்பட்டிருக்கின்றது. புதிதாக ஒரு பொருளாளரைத் தெரிவு செய்தால் தை. அ. அப்புதியவரிடம் கணக்குகளை ஒப்படைப்பாரா என லீக் காரியக் கமிட்டியினர் அஞ்சு



கொழும்பு விழாவில்
தளபதி திருப்பூரார்.

வதாகத் தெரிகிறது. தை. அ. தாம் கணக்குகள் முழுவதையும் தலைவரிடம் ஒப்படைக்க விரும்புவதாக அறிவித்துள்ளார்.

தலைவர் கணக்குகளைப் பொறுப் பேற்றுப் புதிய ஒருவரிடம் ஒப்படைக்கலாம். ஆனால், தலைவர் இஸ்மாயில் சாகிப் எந்த முகத்துடன் தை. அ. வைச்சந்திப்பது எனத் தயங்குவதாகத் தெரிகின்றது. இத்தயக்கம் தை. அ. வுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றிய மனச்சாட்சியின் உறுத்துதலினால் ஏற்பட்டதாயின், தலைவர் அந்த அநீதிகளைக் களைய இந்தக் கட்டத்திலாவது முன்வருதலே நேர்மையான செயலாகும்.

நேரிய இன உணர்வு, சலியாத கடும் உழைப்பு, எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் திறன் இத்தனையும் தை. அ வுக்கு நிறைவுடன் பொருந்தியுள்ளன.

இக்கூற்றினை தை. அ. லீக்கின் நடவடிக்கைகளுடன் கடந்த பத்து ஆண்டுகளாக இணைந்து ஆற்றியுள்ள சாதனைகள் நிறுவும்.

முஸ்லிம் லீக்கின் கீழக்கரைக் கிளையின் செயலாளர் பதவியை தை. அ. 1959-ஆம் ஆண்டில் ஏற்றார். அப்பொழுது அக்கிளையினர் தொகை சுமார் 400. இன்று தமிழ் நாடு முஸ்லிம் லீக்கின் மொத்த அங்கத்தினர் தொகை 27,000 ஆக இருக்கலாம் என மதிப்பிடப்படுகின்றது. தமிழ் நாட்டில் சுமார் 400 முஸ்லிம் கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் பெயருக்காவது ஒரு லீக் கிளை உண்டு. இருப்பினும், கீழக்கரைக் கிளையில் மட்டுமே 6000 பேர் அங்கத்துவம் வகிக்கிறார்கள். இஃது தை. அ. வின் செயல் திறனுக்குச் சான்றன்றோ?

முஸ்லிம் லீக்கின் செல்வாக்கினை விரிவு படுத்துவதையும், லீக்கின் அமைப்பினைப் பலப்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டு 1960 செப்டெம்பர் மாதத்தில் சென்னையில் ஒரு சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாடு முடிவடைந்ததும், அன்றைய 'மணிவிளக்கு' ஆசிரியர் ஆ. கா. அப்துஸ் ஸமது 'மாநாட்டின் குறையை நிறை செய்தவர் தை. அ. செ. அப்துல் காதரே' எனத் தமது பத்திரிகையில்

எழுதினர். மேற்படி மாநாட்டைச் சிறப்புறச் செய்தவர் தை. அ. வே என்பது அன்று ஒருமுகமாக ஒப்புக்கொள்ளப் பட்டது.

தமிழ்நாடு முஸ்லிம்கள் மத்தியிலே லீக்கின் செல்வாக்கு வேகமாக வளர்ந்து வருவதை முதிய தலைவர்கள் அப்பொழுது தான் உணரத் தலைப் பட்டார்கள். இதனால், முறையான மாநாடு ஒன்று கூட்டப் படல் வேண்டுமென்ற எண்ணம் வலுவடைந்தது.

1946-ஆம் ஆண்டிலேதான் முஸ்லிம் லீக் மாநாடு தமிழ் நாட்டில் நடைபெற்றது. அதன் பின்னர் கால் நூற்றாண்டு காலமாக முறையான மாநாடுகள் நடைபெறவில்லை. 1961 - இல், திருச்சியை அடுத்துள்ள காட்டூரில் லீக்கின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் பதவியாளர் தேர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டதும், தலைவர் பதவிக்கான போட்டி ஆரம்பமாகியது. 'முஸ்லிம்' நாளிதழ் ஆசிரியராக ஒரு காலத்தில் கடமையாற்றிய கே. டி எம். அஹமத் இப்ராஹிமும், காயிதே மில்லத்தும் (இருவரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத் தக்கது) தலைவர் பதவிக்கான மனுவைத் தாக்கல் செய்தார்கள். இருப்பினும், தலைவர் போட்டியேயின்றி ஒருமனதாகத் தெரிவு செய்யப் படல் வேண்டுமெனத் தளபதி திருப்பூர் முகைதீன், தை. அ. போன்றோர் விரும்பினார்கள். இவ்விருவரும் போட்டியைத் தவிர்க்கும் முயற்சியில் முழு மூச்சாக ஈடுபடலாயினர். கடைசிவரை சகோதரர்களில் எவராவது போட்டியிலிருந்து வாபஸ் பெற முன்வரவில்லை.

காட்டூரில் மெத்தம் 167 பிரதிநிதிகள் கூடியிருந்தனர். இறுதி முயற்சியில் தளபதி முகைதீனும், தை. அ. வும் ஈடுபடலாயினர். லீக்கின் ஒவ்வொரு பிரதிநிதியையும் தனித் தனியாகச் சந்தித்துத் தமது கருத்தினை வலியுறுத்தினர். இறுதியாக, 'போட்டியைத் தவிர்ப்போம்; தலைவர் பதவியைக் காயிதே மில்லத்திற்கு விட்டுக் கொடுப்போம்' என்ற பொருள்பட ஒரு மகஜரைத் தயாரித்தனர். இதிலே தளபதி முகைதீன் முதலாவதாகக் கையொப்பமிட, அதனை ஒவ்வொரு பிரதிநிதியிடமும் தை. அ. எடுத்துச் சென்று இசைவு ஒப்பம் பெறுவதில் ஈடுபடலானார். அதிலே ஆ. கா. அப்துஸ் ஸமது பாதி அளவில தமது கையொப்பத்தினை வைத்தார். 167 பிரதிநிதிகளுள் 133 பேர்கள் தமது இசைவு ஒப்பத்தினை வைத்த பின்னர், அடுத்து தை. அ. தமது ஒப்பத்தினை இறுதியாக வைத்து அம்மகஜரை மாநாட்டில் அமைதியாகச் சமர்ப்பித்தார். நிலைமை தனக்குச் சாதகமாக இல்லை என்பதை அப்பொழுதுதான் உணர்ந்த கே. டி. எம். போட்டியிலிருந்து வாபஸ் பெற, காயிதே மில்லத் ஒருமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவராகக் காயிதே மில்லத் தேர்ந்தெடுக்கப் பட்டதும் அவர் தமது நன்றியுரைப் பேச்சினை நிகழ்த்தினார். அதிலே செயலாளர், பொருளாளர் பதவிகளுக்குத் தான் முன்மொழிபவர்களைப் பிரதிநிதிகள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தொடர்ந்து செயலாளர் பதவிக்கு கே.

டி. எம். ஐயும், பொருளாளர் பதவிக்கு தை. அ. வையும் தலைவர் முன் மொழிந்தார். செயலாளர் பதவிக்கான பிரேரணையை ஏ. எம். யூசுபும், பொருளாளர் பதவிக்கான பிரேரணையை அப்துல் வஹாப் ஜானியும் வழிமொழிந்தார்கள். தலைவர் விண்ணப்பித்தவாறே இருவரும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

[அன்று தை. அ. வின் பெயரைப் பொருளாளர் பதவிக்கு வழி மொழிந்த அதே ஜானிதான் 68 - இல் சென்னை மேலவை உறுப்பினர் பதவிக்கு தை. அ. வுடன் போட்டியிட்டார் என்பதும், ஜானியின் பெயரைத் தலைவர் காயிதே மில்லத்தே பிரேரித்தார் என்பதும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.]

1962-ஆம் ஆண்டில் இந்தியப் பொதுத்தேர்தல் வந்தது. இத்தேர்தலில் தொகுதி நிர்ணயம் சம்பந்தமாக எதிர்க் கட்சிகளுக் கிடையில் ஓர் உடன்பாடு தோன்றும் நிலை உருவாகியது. இறுதியில் தி. மு. க. வும் முஸ்லிம் லீக்கும் தொகுதி நிர்ணயம் சம்பந்தமாக ஓர் உடன்பாட்டிற்கு வந்தன. இதன் பிரகாரம் சட்ட சபைக்கு ஏழு தொகுதிகளிலும், லோக சபைக்கு ஒரு தொகுதியிலும் லீக் அங்கத்தினர் போட்டியிட்டார்கள். தேர்தல் முடிவில் எண்மரும் தோல்வியடைந்தனர். அத்தேர்தலில் பலர் கட்டுப் பணத்தையே இழந்தனர். இன்று இராமநாதபுரம் மாவட்டக் கிளைத் தலைவராக இருக்கும் எம். எஸ் அப்துல் ரஹிம் அவர்கள் மட்டுமே இத்தேர்தலிலே கணிசமான வாக்குகளைப் பெற்றுக் காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் அடைந்த தோல்விக்கான காரணங்களை ஆராய லீக்கின் காரியக் கமிட்டி கூடிற்று. அப்பொழுது நிதித் தட்டுப் பாடும், போதிய பிரசாரமின்மையுமே தோல்விக்கான காரணங்கள் என்ற பொதுவான கருத்து நிலை நாட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து லீக்கிற்கு நிதி திரட்டும் குழு ஒன்று நியமிக்கப் பட்டது. அக்குழுவிற்கு தை. அ. அமைப்பாளராக(கன்வீனராக) நியமிக்கப்பட்டார். இக் குழுவின் திறமையான உழைப்பின் அறுவடை தொடர்ந்துலீக் அடைந்த தேர்தல் வெற்றிகளுக்குப் பெரிதும் உதவின என்பதை இன்று அப்பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் கூட மறுக்கமுடியாத ஒன்ருகும்.

1964 - ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில், கூட்டுத் தேர்தல் உடன்பாட்டின் பிரகாரம் லீக்கிற்கு ஐந்து தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. லீக்கின் ஐந்து வேட்பாளர்களும் வெற்றியீட்டினர். சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் மட்டுமின்றி, தமிழ் நாடு பூராகவும் நடைபெற்ற மாநகரசபைத் தேர்தல்களிலும் லீக் நேரடியாக ஈடுபட்டு சுமார் 150 இடங்களில் வெற்றிக்கொடி நாட்டியது.

இவ்வுறுப்பினர் சகலரையும் பாராட்டும் விழா ஒன்று சென்னையிலே கோலாகலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னையின் மிக நவீன ஹோட்டலான இம்பீரியல் ஹோட்டலின் ரீகல் கார்டனில் இவ் விழா நடை பெற்றது. இவ் விழாவில் தலைவர் காயிதே மில்லத், முஹம்மது கோயா (தற்பொழுது கேரளா அரசின் கல்வி அமைச்சர்), சி. பா.

சென்ற திருக் குர்ஆன் மலரில் முஸ்லிம் லீக் விவகாரம் பற்றி 'அரன்' எழுதிய கட்டுரையில், காயிதே மில்லத்தின் மகன் பெயர் சிலார் மியான் எனத் தவறுதலாக வந்துவிட்டது. சென்னை மாவட்ட முஸ்லிம் லீக் செயலாளர் ஹாஜி ஆர். சிலார் மியான் எம். சி. என்பவர் வேறு. கட்டுரையில் குறிக்கப்பட்டவர் காயிதே மில்லத்தின் மகன் மியான்கான் ஆவர். இத்தவறுதலுக்காக வருந்துகின்றோம்— ஆர்.

ஆதித்தனார் (தற்பொழுது தமிழ் நாடு அரசின் அமைச்சர்), அன்பில் தர்மலிங்கம், முனு ஆதி போன்றவர்களும் கலந்து கொண்டார்கள்.

தமிழ் நாடு முஸ்லிம் லீக் பொருளாளர் தை. அ. செ. அவர்கள் வெற்றி பெற்ற கார்ப்பரேஷன் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தங்க மோதிரமும், விழாவிற்குச் சமுகமளித்த மாநகர சபை உறுப்பினர் சுமார் 100 பேர்களுக்கும் கதர் சால்வையும் வழங்கிக் கௌரவித்தார்.

லீக்கின் வளர்ச்சி கண்டு முதியவர்கள் மகிழ்ந்தார்கள். பலர் தை. அ. செ. வின் அயராத நல்ல உழைப்பைப் பாராட்டினார்கள். அவருடைய நிதித் திறனால் சென்னையில் லீக்கின் பணிமனை நெடிதுயர்ந்து அமைந்தது. இந்நிலையில் லீக்கின் மூன்றாவது மாநாட்டைக் கூட்டவேண்டும் என்ற அபிப்பிராயம் பரவலாகத் தோன்றியது.

1967-ல் பொதுத் தேர்தல் வந்தது. லீக்கின் நிலையை ஆராயும் முகமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஐயம் பேட்டையில் லீக்கின் காரியக் கமிட்டி 1966-இன் பிற்பகுதியில் கூடியது. தேர்தல் நிதி திரட்டும் நோக்கத்துடன் மீண்டும் தை. அ. அவர்களை அமைப்பினராகக் கொண்டு ஒரு குழு நியமிக்கப் பட்டது. இக் குழுவில் டாக்டர் ஹபிபுல்லா பேக், கே. பி. ஷெய்குத் தம்பி, ஜானிபாய், மியான்கான், ஆ. கா. அப்துஸ் ஸமது ஆகியோர் அங்கம் வகித்தனர். மேலும் இக் குழுவில் உறுப்பினர்களைச் சேர்ந்துக்கொள்ளும் அதிகாரம் கன்வீனருக்கு வழங்கப்பட்டது. மாவட்டம் தோறும்நிதிக் குழுவினர் நேரிற் சென்று நிதி திரட்டினார்கள். எதிர்பார்க்கப் பட்ட தொகையை விடக் கூடுதலான நிதி திரண்டது. நிதிக்குழு உறுப்பினர் ஆ. கா. அப்துஸ் ஸமது மட்டும் எந்த மாவட்டத்துக்கும் செல்லவும் இல்லை, ஒரு பைசாதானும் தேர்தல் நிதிக்குத் திரட்டிக் கொடுக்கவுமில்லை என்பது ஓர் அந்தரங்க உண்மையாகும்.

தோழமைக் கட்சிகளுக்கிடையிற் போட்டி தவிர்ப்புப் பற்றிய பேச்சு எழுந்தது. லீக் சார்பில் தை. அ. செ., அப்துல் காதர், டாக்டர் ஹபிபுல்லா பேக், சாரண பாஸ்கரன், ஆ. கா. அப்துஸ் ஸமது ஆகியோர் தோழமைக்கட்சிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். லீக் சட்டசபைக்கு நாலு தொகுதிகளிலும், லோக சபைக்கு ஒரு தொகுதியிலும் போட்டியிட்டது. இதில் மூன்று சட்டசபைத் தொகுதிகளிலும், ஒரு லோக சபைத் தொகுதியிலும் லீக் வெற்றி பெற்றது. லீக்கின்

வெற்றி பல துறையினராலும் பாராட்டப்பட்டதுடன், தமிழ் நாட்டின் பலம் வாய்ந்த அரசியல் கட்சிகளுள் ஒன்ருக லீக்கும் உயர்ந்தது; மக்களால் மதிக்கப்பட்டது. இந் நிலைக்கு முஸ்லிம் லீக்கை தமிழ் நாட்டில் உயர்த்தி வைத்த பெருமை தை. அ. செ. அவர்களைச் சாரும். இதற்காக அவரை முஸ்லிம் லீக் செயற்குழு தீர்மானம் போட்டுப் பாராட்டியதுடன், தமிழ் நாடு அரசு லீக்குக்கு வழங்கிடும் முதல் கௌரவ பதவிக்கு தை. அ. செ. வைச் சிபார்சு செய்வது என்றும் முடிவாகியது. செயற் குழுத் தீர்மானத்தின் படி 23 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் நாடு மீன்பிடித் துறை ஆலோசனைச் சபை உறுப்பினராக (பதவி சிறியதாயினும்) தை. அ. செ. நியமிக்கப்பட்டார். இதுவே லீக்கிற்கு ஒதுக்கப்பட்ட முதலாவது அரசாங்கப் பதவி என்பதும் நினைவில் இருத்தத்தக்கது.

மீண்டும் லீக்கின் மூன்ருவது மாநாடு பற்றிய பேச்சு எழுந்தது. 1968 - இன் நடுப்பகுதியில் மாநாட்டை நடத்துவது என்று காரியக் கமிட்டி தீர்மானித்தது. இம் மாநாட்டுக் குழுவுக்கு ஆ. கா. அப்துஸ் ஸமது தலைவராகவும், மாநாட்டு நிதிக்குழுவிற்கு தை. அ. செ. வே தலைவராகவும் நியமிக்கப்பட்டார்கள். இந்நிலையில் சென்னை மேலவை உறுப்பினர் பதவிகளும், ராஜ்ய சபை உறுப்பினர் பதவிகளும் சில காலியாகின. தேர்தல் உடன்பாட்டின்படி தோழமைக் கட்சிகளில் ஒன்ருன முஸ்லிம் லீக்கிற்கு ஒரு ராஜ்ய சபை உறுப்பினர் பதவியும், ஒரு சென்னை மேலவை உறுப்பினர் பதவியும் ஒதுக்கப்பட்டன. இப்பதவிகளுக்கு யார் யாரைச் சிபார்சு செய்வது என்பதை ஆராய முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி கூடியது. ராஜ்ய சபாவுக்கு தளபதி முகைதீன் அவர்களையும், சென்னை மேலவைக்கு தை. அ. செ. அவர்களையும் உறுப்பினராக்க வேண்டும் என்று காரியக் கமிட்டியில் ஒரு பகுதியினர் விரும்பினுர்கள். இரு பதவிகளுக்கும் போட்டி ஏற்பட்டது. தளபதியாரும்' தை. அ. வும் சொற்ப வாக்குகளாலே தோல்வி அடைந்தார்கள்.

முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இத் தேர்தலின் போது தன் பொறுப்பை உணர்ந்து நடக்கத் தவறிவிட்டார். தலைவர் என்ற பதவியில் அமர்ந்து கொண்டே அவர் பக்கச் சார்பாக நடந்து கொண்டமை அரசியல் இயக்கத்தின் சகல பாரம்பரியங்களுக்கும் முரணுக அமைந்தது. தலைவரின் பக்கச் சார்பான போக்கைக் கண்டிக்கும் முகமாக, தை அ. செ. லீக்கில் வகித்த பதவிகளையும், லீக் மூலமாகக் கிடைத்த பதவிகளையும் துறப்பதாகக் காரியக் கமிட்டிக்குக் கடிதம் எழுதினுர். தை. அ. செ. தனது ராஜினுமாவைச் சமர்ப்பித்த போதிலும், லீக் காரியக்கமிட்டி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எப்படியும் அவரைத் தாஜாபண்ணி அவர் முடிவை மாற்றிவிடலாம் என்பது பொதுவான அபிப்பிராயமாக இருந்தது.

அக்டோபர் 2, 3-ம் திகதிகளில் லீக் காரியக்கமிட்டி சென்னையில் கூடியது. தை. அ. செ. அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. 2-ம் திகதி நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்திற்கு தை. அ. செ. சென்ருர். அக்கூட்டத்தில் அவருடைய ராஜினுமா பிரஸ்

தாபிக்கப்பட்ட போதிலும் ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை.

பல காரனங்களால் தை. அ. செ. 3-ஆம் நாள் நடை பெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்திற்குச் செல்ல வில்லை. அன்றைய தினமே ஏழு உறுப்பினர் மீதான தடை உத்தரவுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம் முடிவு சம்பந்தப்பட்டவர்கள் சபையில் இல்லாதசமயத்தில் திடு திப்பென்று நிறைவேற்றப்பட்டது என்பது மிகவும் முக்கியமானது.

நான்காம் திகதி பத்திரிகைகளில் செய்தி வெளியான பின்னரே சம்பந்தப்பட்டவர்கள் இப்படியொரு முடிவு எடுக்கப்பட்டிருப்பதை அறிந்தார்கள். செய்தி வெளியாகியதும் லீக்கின் சிபார்சால் தமிழ் நாடு மீன் பிடித்துறை ஆலோசனை சபையில் தான் பெற்ற பதவியையும் தை. அ. செ துறந்துவிட்டார். இவரின் இடத்துக்கு முஸ்லிம் லீக்கரோ அல்லது முஸ்லிமோ நியமிக்கப் படவில்லை என்பதும் கவனத்துக்குரியது.

முஸ்லிம் லீக்கில் தை. அ. செ. வகித்த பதவிகள் அனைத்தும் இன்றும் எவராலும் நிரப்பப்படாது காலியாகவே கிடக்கின்றன. இதிலிருந்து நிதி விடயங்களில் பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வரும், அதே நேரத்தில் சலியாத கொண்டுள்ளம் கொண்டவரும் இன்றுவரை கிடைக்கவில்லை என்ற உண்மையே பெறப்படுகின்றது.

1959ல் முஸ்லிம் லீக்குடன் தன்னைப் பிணைத்துக் கொண்ட தை. அ. அவர்கள் 1968 வரை பின்வரும் பதவிகளை வகித்திருக்கின்றார்: (1) முஸ்லிம் லீக் கீழக்கரைச் செயலாளர் (2) மு. லீ. கீழக்கரைக்கிளைப் பொருளாளர் (3) தமிழ் நாடு மாநில முஸ்லிம் லீக் பொருளாளர் (4) இந்திய யூனியன் முஸ்லிம் லீக் காரியக்கமிட்டி உறுப்பினர் (5) த. நா. மு. லீக் கட்டிடக் குழுத் தலைவர் (6) தேர்தல் நிதிக்குழு அமைப்பாளர் (6) மாநாட்டு நிதிக்குழுத் தலைவர் (8) புலவர் ஆப்தீன் நிதிக் குழு உறுப்பினர் (9) அட்ஹாக் கமிட்டி உறுப்பினர் (10) தோழமைக் கட்சிகள் இணைப்புக் குழு உறுப்பினர் (11) தமிழ் நாடு மீன்பிடித் துறை ஆலோசனைக்குழு உறுப்பினர் (12) கிறசென்ட் மருத்துவ மனைப் பொருளாளர்.

இன்று கிறசென்ட் மருத்துவ மனைப் பொருளாளர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகளை அவர் துறந்து விட்டார்.

'தமிழ் நாடு முஸ்லிம் லீக்கின் மூன்ருவது மாநாடு கூடுமா?' என்று பலரும் கேட்கின்ருர்கள். தை. அ. செ. விடம் நாம் இது பற்றி வினவிய பொழுது, அவர், ''மாநாடு கூடவேண்டும் என்று விரும்பியவர்களை வெளியேற்றி விட்டார்கள்'' என்று மட்டும் அமைதியாகக் கூறினுர்.

தமிழ் நாடு முஸ்லிம் லீக் இப்பொழுது இறங்குதுறையை நோக்கி அடியெடுத்து வைத்து விட்டது என்பது தெளிவாகியுள்ளது. பிளவுக்குப் பின் நடைபெற்ற சென்னை காப்பரேஷன் தேர்தலில் லீக் வேட்பாளர்கள் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றிருந்தாலும், காரைக்கால்—புதுவை தேர்தலில் லீக் நூற்றுக்கு நூறு வீதம் தோல்வி கண்டுள்ளது என்பதையும் நாம்

மறைத்துவிட முடியாது. புதுவை சட்டசபையில் லீக் வைத்திருந்த தொகுதியையும் கோட்டை விட்டுவிட்டது. இனி நடைபெறவிருக்கும் தமிழ் நாடு மாநகர சபை தேர்தல்களில் இன்று லீக் உறுப்பினர்களாக இருப்பவர்கள் பலர் சுயேச்சையாகப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்கள். இந்த நிலை நீடிக்குமாயின் நாளை தமிழ் நாட்டில் முஸ்லிம் லீக் என்று ஒரு ஸ்தாபனம் இயங்குமா என்பது கேள்விக்குரியதே! மீண்டும் லீக் தன் தாழ்வு நிலையை அடைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

லீக் விவகாரம் நீதி மன்றம் ஏறும் என்பதில் சிறிதும் உண்மையில்லை என்று தை. அ. செ. நம்மிடம் உறுதி கூறியுள்ளார். இவ்வுறுதி மொழி நம் மினத்தின் ஐக்கியத்திற்குப் பால் வார்த்ததாகவும் அமைந்தது.

தியாகத் தழும்பேறிய செம்மல்கள், காரிய சாதனை மிக்க செயல் வீரர்கள், கண்ணியம் மிக்க தலைவர்கள் என்று முஸ்லிம் மக்களாலும், பிறராலும் மதிக்கப்படும் எழுவரை இவ்வளவு நீண்டகாலத்திற்கு 'தடை உத்தரவு' விதிக்கப்பட்டு வைத்திருப்பதில் லீக் அடைந்துள்ள ஆதாயத்தை, இத் திரை மறைவு நாடகத்திற்குக் காரணர்களாக அமைந்த லீக்கர்கள் பகிரங்கப் படுத்த முன் வருவார்களா?

லீக் தலைவர்கள் தமிழ்நாடு அரசியலைக் கூர்ந்து நோக்கட்டும். உள்கட்சிப் போராட்டம் நடைபெறாத கட்சியில்லை. காங்கிரஸ் கட்சிக்குள்ளும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சி. சுப்பிரமணியத்திற்கும், அனைந்திந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னைநாள் தலைவர் கே. காமராஜுக்கும் இடையில் அபிப்பிராய பேதங்கள் இல்லையா? இன்று தமிழ் நாட்டின் ஆளும் கட்சியான தி. மு. க. வில் கலைஞருக்கும் நாவலருக்குமிடையில் அபிப்பிராய பேதங்களில்லையா? கலைஞருக்கும் புரட்சி நடிகருக்கு மிடையில் அபிப்பிராய பேதங்களில்லையா? ஆனால், கட்சி நலன் என்று வந்துவிட்டால், தமது சொந்த விரோதங்களை மறந்து, ஒரே கூட்டாக அவர்கள் செயற்படவில்லையா? இவற்றைச் சகல லீக்கர்களும் சிந்தித்துப் பார்த்தல் தலையாய கடன்.

இஸ்லாத்தைப் போன்று சகோதரத்துவத்தை வலியுறுத்தும் மதம் பிறிதில்லை. மதமே அரசியலாக அமைந்துள்ள நேர்த்தி இஸ்லாத்திலேதான் உண்டு. இவற்றை உன்னி 'பொருளாளர் நிலை என்ன?' எனக் கேலி பேசி, 'இந்தப் பிளவாவது முஸ்லிம் லீக்கின் அரசியற் செல்வாக்கைவீழ்த்தாதோ?' என நேர்ச்சை செய்யும் அரசியல் விரோதிகளுடைய எக்களிப்பினை அடக்கிட, நேர்மையுடனும் நீதியுடனும், அன்புடனும், அறத்துடனும், கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும், அரசியல் விவேகத்துடனும் தீர்க்கதரிசனத்துடன் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ் நாடு முஸ்லிம் லீக்கர்கள் சகலரும் ஒன்றுபட்டுழைக்க முன்வருவார்களா என்பதுதான் 'இளம்பிறை'யின் கேள்வி. அப்படி அவர்கள் முன் வருதல் வேண்டும் என்பது 'இளம்பிறை'யின் பிரார்த்தனையுமாகும்.

—அரன்

அங்கம் நான்கு

# யானை

எம். ஏ. ரஹ்மான்

செருக்களத்திலே ..

கஜ ரத துரக பதாதிகள் அணி வகுத்து நிற்கின்றன. யானையின் பலம், குதிரையின் காம்பீரியம், தேரின் வேகம் ..

இவற்றை மறைப்பது போலக் காலாட்களின் உபரி.

இரு பக்கமும் சமபலம்.

கட்டிலிலே பெரியவர் சுருண்டு கிடக்கிறார். எதையோ நினைத்துக் கொண்டவராகப் படுக்கை நிலையிலேயே புரண்டு டயறியைப் புரட்டுகிறார். பென்சிலை வாயிலே கவ்விக்கொண்டு மனக்கணக்கிலே லயிக்கிறார். வருமான வரிக்கான கணக்குகளுக்கு மட்டுமே எழுத்துக் கணக்குத் தேவை. தேவையும் மறுமுனை உந்துதலின் விளைச்சல். மற்றும்படி எந்தப் பெரிய கொடுக்கல் வாங்கலையும் மனத்திலே பதித்து வைத்துச் சீராக நடத்தக் கூடிய ஆற்றல் அவருக்கு உண்டு.

படுக்கையிலே கிடந்து பழங் கணக்குப் பார்க்கும் பெரியவர்.

செருக்களமோ? படுக்கையோ?

இது சதுரங்கப் பலகை!

அதன் இரு புறமும் மோகனும், அவனது நண்பனும் அமர்ந்திருக்கிறார்கள்.

ஆரம்ப கட்டத்திலே அநாயாசமான நகர்த்துதல்கள்.

மோகன் நாலாவது 'மூவ்' ஆக 'காஸிலிங்' செய்கின்றான். யானை தன் இருப்பிடம்

பெயர்ந்து அரசனுக்குப் பக்கத்தில் வந்து நிற்கின்றது. கோட்டை கட்டிக் காவல் செய்த பின்னரே, தன் படையின் பலத்தை எதிரி சங்காரத்திற்கு முன்னனுப்பும் யுக்தி.

"தம்பி! .." - உள்ளேயிருந்து தகப்பனது குரல் வலிக்கின்றது.

"வன் மினிற் . நௌ இட் இஸ் யூவர் மூவ் .." எனக்கூறி எழுந்து, ஆட்டப் பலகையை ஒருமுறை 'பறவைக் கண் பார்வை'யால் மனத்திலிருத்திய பின்னர் உள்ளே செல்கின்ருன்.

"தம்பி, அவர் ராமச்சந்திரனைப் போய்ப் பாத்தியா? வரேக்கை புத்தகக் கடைக்கும் பொயிட்டு வரச் சொன்னனுன் ..."

அவர் ஆடமுடியாவிட்டாலும், மோகனை ஆட்டி வைக்க எவ்வளவோ பிரயத்தனம் எடுத்துக் கொள்கிருர்.

"நான் 'போன்' பண்ணினன் .. அவர் அங்கையில்லையாம் .. புத்தகக் கடைக்கு 'டெலிபோன்' பண்ணினனுன்... இன்னமும் அந்த 'செக்' 'ரியலேஸ்' ஆகி வரேல்லையாம் .."

மோகன் தான் இருந்தவிடத்திலிருந்தே செய்து முடித்தவற்றை எல்லாம் ஒப்புவிக்கின்ருன்.

"சரி தம்பி, நீ ஒண்டும் இன்னமும் விளங்கிக் கொள்ளேல்லே. நேரிலே போய்ப் பாத்தால்தான் எங்கடை அவசரம் அவங்களுக்கு விளங்கும். 'டெலிபோன்' எண்டால் தெரியாதே? ஆறுதலாக்கும் எண்டு நினைச்சுக் கொள்ளுவாங்கள். எதுக்கும் ஏழரை மணிபோலே ஒருக்காப்போய்ப் பாத்திட்டு வா .. ஏழு மணிக்கெல்லாம் அவர் வீட்டை வந்திடுவார்,"

"ஓ .. அதுக்கென்ன போய்ப் பாத்திட்டு வாறன்... நேரம் கிடக்குதுதானே .."

பெரியவர் பெருமூச்சு ஒன்றை அவஸ்தையுடன் வெளியேற்றுகின்ருர்.

விருந்தைக்கு மீண்ட மோகன் தன் நண்பன் செய்த 'மூவ்'வை அலசுகின்ருன்.

இவன் என்ன செய்யப் போகிருன்? டெலிபோனிலே எல்லா

*வற்றையும் முடித்துக்கொள்ள லாமெண்டு நினைக்கிறனே. ஒரு முறைக்கு ஆயிரம் முறைபோய் நச்சரித்தாலும் குடுத்ததை வாங்கிக் கொள்ளுறது பெரும் பொறுப்பாக இருக்கிற இந்தக் காலத்திலை .. என்ரை கண்ணுக்கு முன்னாலையே இவனுக்கு இந்த அலுவல்களிலே கரிசனை உண்டாக்கி விடவேணும் எண்டு தான் நானும் பாடுபடுறன்... ஒண்டுக்கும் 'மசியமாட்டன்' என்கிறான்.*

*அவள் தாய்தான் செல்லம் குடுத்து எல்லாத்தையும் பழுதாக்கினது.*

*அவளை ஏன் குறை சொல்லுவான்? எட்டு வருஷம் பிள்ளையே இல்லையோ எண்டு ஏங்கிக் கிடந்தவள். இவனுக்காகத் தவம் கிடந்தவள்.*

*நான் மட்டும் என்ன? அந்த, நேரத்திலை கண்டிச்சு வைச்சிருந்தால் இப்பிடியா வளர்ந்திருப்பான்?*

விளையாட்டு நெருக்கடிக் கட்டத்தை அடைந்து, களை கட்டுகின்றது. தகப்பன் வெளியே வரமாட்டார் என்னும் உணர்வும் தெம்பு தர, கைகள் தாமாகவே 'பக்கெற்றை'ப் பிரித்து சிகரெட் ஒன்றை உதட்டிற் பொருத்துகின்றன. இவன் நீட்டிய பக்கட்டிலிருந்து நண்பனும் ஒரு சிகரட்டை எடுத்துக் கொள்ளுகிறான். அவன் தட்டிய நெருப்புக் குச்சியிலேயே இவனும் பற்றவைத்துக் கொள்ளுகின்றான்.

தகப்பனுக்கு முன்னால் மோகன் புகைப்பதில்லை. அந்த அளவுக்கு மரியாதை உண்டு. ஆனால், தாய் நெருப்புப் பெட்டி எடுத்துக் கொடுப்பதுண்டு என்பது பிரஸ்தாபம்.

இருவரது உதடுகளும் சிகரெட்டுகளைக் கவ்வியபடியிருக்க, கண்கள் ஆட்டப் பலகையை நோட்டமிடுகின்றன. சாம்பல் உதிராது அப்படியேயிருக்க, சிகரெட்டுகளிலிருந்து நீலப் புகை நிலை குத்தாக மேல் நோக்கி எழுகின்றது. நண்பன் இடக்கை ஆள்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கு மிடையே சிகரெட்டை இடுக்கிச் சாம்பலைத் தட்டுகிறான். அவன் ஓர்

'இழுவை' புகையை நெஞ்சுக்குட் புகுத்தி இரண்டு புகை வளையங்களை வெளித் தள்ளிய படி குதிரையொன்றினால் 'செக்' கேட்கிறான்.

அரசனைக் காப்பாற்றிய மோகன் குதிரையின் பின்னங் காலடியினால் யானையை இழக்கின்றான். கோட்டை கட்டி அதற்குக் காவலாக வைக்கப் பட்ட யானை முன்யோசனையில்லாது அசைந்ததால் இப்படிக் குதிரைப் பாய்ச்சலுக்குள் சிக்கிவிட்டது.

கையிலே கன்னத்தைச் சாய்த்து, கழுத்தை ஒரு கோணத்திலே திருப்பி, காகப் பார்வையினால் ஆட்டப் பலகையை அலசுகிறான் மோகன்.

உள்ளே பெரியவர் உடல் குலுங்க ஒரு பாட்டம் இருமுகிறார். உழைத்து உழைத்து நைந்துபோன உடல் நோயின் உபாதையைத் தாங்க இயலாது குலுங்குகின்றது.

பம்பரம் சுழன்று கொண்டிருக்கும் வரை தன் அச்சை நிமிர்த்தி, அசைவிலேயே உறுதிச் சமநிலை போன்ற ஒரு தோற்றந் தருகின்றது. சுழற்றி மந்த கதியடைய, தள்ளாட்டம் ஏற்படுகின்றது. தள்ளாடி விழப்போகும் நிலை —.

வைத்தியரின் கட்டாயத்தின் பேரில் அவர் கட்டிலிலே சுருண்டு படுத்துக் கிடக்கிறார்.

மிஷன் பாடசாலையில் உதவி ஆசிரியராக மட்டும் வாழ்ந்திருந்தால், இன்று அவர் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியராகவே மதிக்கப் பட்டிருப்பார். ஆனால், இன்று அவர் நிலை வேறு. 'பென்ஷன்' பணத்தை எடுத்து, எண்ணி எண்ணிச் செலவுசெய்ய வேண்டிய அவல நிலையுமில்லை.

சிலர் அவரை 'மாஸ்டர்' என அழைத்தாலும் அது பெயருக்கமைந்த ஒரு தொடர் மொழியாக உள்ளது. அவர் ஒரு லட்சாதிபதி என்பதை யாவரும் அறிவர்.

வடக்கேயிருந்து வயிற்றுப் பிழைப்புக் கென்றே வரும் உத்தியோகத்தர் பலர் ஒரு காலைக் கந்தோரிலும், மறு காலைப்

புகை வண்டியிலுமாக வைத்து 'வீக் கென்ட்' பயணத்திலேயே காலத்தை விரயஞ் செய்து, இங்குமில்லாத அங்குமில்லாத திரிசங்கு நிலையிலே தொங்கி, ஊருக்கு நல்ல பிள்ளையாக, போன இடத்தில் 'பாயோடு ஒட்டி'விடாது தப்பித்துக்கொள்ள விழையும் முயற்சியில் எதையுமே சாதித்துவிடாது அல்லற்படும் காலத்தில், ஸ்திரமாக இரண்டு கால்களையும் வந்த இடத்திலேயே ஊன்றி, தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் உரமாகப் பெய்ய, ஆணிவேர் ஆழமாகச் சென்று நிலைபெற்று, மரம் தலைநிமிர, பக்க வேர்களும் சல்லிவேர்களும் பரவிப் பெருக, தனி மரமே குளிர்தரும் தோப்பாக மாறிவிட்ட பெருமை!

அந்த நிழலையும் தண்மையையும் அநுபவிப்போர் பலர் .. நாணயஸ்தர் என்னும் பெயரை நிலை நாட்டியதும், அந்தப் பெயரே முதலாக நின்று திருமகளை அழைக்கின்றது. அந்தப் பெயரை உருவாக்குவதற்குத்தான் எவ்வளவு காலம்' எவ்வளவு பிரயத்தனம் ..

தேடுவதைவிட, தேடியதை நாலு தலைமுறைக்கு நிலைக்கப் பண்ணுவதிலேயே பெருமை அதிகம். இருந்தும் ஆயிரம் பொன், இறந்தும் ஆயிரம் பொன் என்றிருக்க வேண்டுமே, யானைபோல!

சதுரங்க விளையாட்டில் நண்பனின் யானை ஒன்றை வெட்டி, அதற்காகத் தன் தேரினைப் பறிகொடுக்கின்முன் மோகன்.

யானைக்கும் அடி சறுக்கும்... உண்மைதான்.

நான் எவ்வளவு நிதானமாக, மதங் கொள்ளாத யானையாக வாழ்ந்துவிட்டேன். ஆனால் ..

மோகனை இப்படிப் பொறுப்பில்லாதவனாக வளர்த்துவிட்ட குறை என்னையுஞ் சாரும்.

அன்றொரு நாள், பள்ளிக்கூட 'இன்டர்வேல்' நேரத்திலே, முற்றவெளியில் கூட்டாளிகளோடு சேர்ந்து சிகரெட்

புகைப்பதைப் பார்த்து, அவ்விடத்தில் வைத்தே ஓர் அறை அறைந்தேன். ஆத்திரத்தில் அது பலமாகத்தான் விழுந்துவிட்டது. வீட்டுக்கு வந்தவன், 'நச்சுக்காய் தின்று செத்துப் போவேன்' எனத் தாய்க்காரியுடன் தர்க்கம் பண்ணி ..கடைசியிலை நான் சமாதானஞ் செய்து பத்து ரூபாக் காசும் குடுத்துப் படம் பார்க்க அனுப்பி வைச்சன்...

ஒரு அலுவலிலும் அக்கறை இல்லை. அதுதான் பெரிய யோசினை 'கிரிக்கெற்' எண்டு எவ்வளவு தொந்தரவு பண்ணிவிட்டான். வீட்டிலை 'பிரக்டீஸ்' பண்ணுவதற்கு ஒரு 'பாற்' வாங்கி விளையாடிறான். அதிலை ஒண்டுமில்லை. எழுபத்தைந்து ரூபாதானே? போனால்போகுது. ஒரு 'மாட்'சிலே நல்லா விளையாடினாலும்: எனக்கென்ன தெரியும்?

அவங்கள் வாத்திமாரும் சேந்துதான் பழுதாக்கினது.

வீட்டிலை படிப்பும் இல்லை; ஒண்டுமில்லை... 'கிரிக்கெற்' தான்... பின்னர், சம்பியன் மாட்சிலே தோற்றுப் போனாங்களாம். தோற்கிறதிலை ஒண்டுமில்லை. வெற்றி தோல்வி இருக்கிறதுதானே? விளையாட்டைவிடுவம்...

படிக்கிறதுக்கு எத்தினை 'டியூஷன்'? ஒவ்வொரு பாடத்திற்கும் திறம் திறம் வாத்திமாரை வைத்து 'டியூஷன்' சொல்லிக்குடுத்தன். நான் படிக்கிற காலத்திலை இப்படி வசதியிருந்திருந்தால் இப்ப நான் இருக்க வேண்டிய நிலை என்ன?

அது சரி, இப்பத்தான் என்ன குறைவோ?

பெரியவர் மீண்டும் இருமித் தள்ளுகிறார்.

சதுரங்க விளையாட்டு, இறுதிக் கட்டத்தினை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆட்டப் பலகையிலே, காய்கள் பாலைவனத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக உயிர்ப்புப் பெற முயலும் புல் பூண்டைப் போலிருந்தன.

அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் வீடுகளையும் வளவுகளையும் பெரியவர் வாங்கினார். எல்லாமே இப்பொழுது உயிர்ப்புக் கொண்டுவிட்டன. கைராசிக் காரர். தொட்ட தெல்லாம் பொன்னாகின.

மோகனது காய்கள் ஒவ்வொன்ருகக் குறைந்து வருகின்றன. அரசனுக்குத் துணையாக மூன்று காலாள்களே எஞ்சியிருக்கின்றன. எதிரியின் நிலை ஏதோ படைப் பலம் பொருந்தியதல்ல. இருந்தாலும், யானையொன்று மேலதிகமாக நின்று அரசனுக்குத் துணை செய்கின்றது.

> "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகத
> வாம் பேரறிவாளன் திரு"

படுக்கையிலே கிடக்கும் பெரியவரின் நினைவுகள் வேறொரு தடத்தில் கிளை பிரிகின்றன.

ஆசிரியர் தொழிலிலிருந்து 'பிறி மட்சூராக' ஓய்வுபெற்ற பொழுது பிரியாவிடை ஒன்று நடைபெற்றது. அதிலே பலர் எழுந்து பேசினார்கள். அவர்களுட் பலர் கடமைப்பட்டவர்; சிலர் கடன் பட்டவர். கடன்பட்டவர்தாம் பேரறிவாளன் திருவையும் ஊருணியையும் பிணைத்துப் பேசினர்.

ஊருணிக்கு நீர் கிடைத்த வரலாறு அது யாருக்குத் தெரியும்? யுத்த காலத்தில் இங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு அரிசி 'ஏற்றுமதி'.. போலீஸ், கட்டுக் காவல் எல்லாவற்றிலும் மண் தூவி 'மற்றது' இறக்குமதி... சட்டென்று விளைந்த மூலதனம்.. பண வருவாய்க்கு பதில் சொல்லச் சின்னச் சின்னக் 'கொந்தராத்துக்கள்' அதுவே பெரிய 'பிஸினஸ்' ஆக மாற, பல்கிப் பெருகிய பெரிய கொந்தராத்துக்கள்!

கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டுதான் போட்ட

முதலைத் திருப்பி யெடுக்க வேணும். ஊருணியிலிருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போகாமற் தடுக்கப் பாடுபட்டதெல்லாம் யாருக்குத் தெரியும்?... எத்தனை சந்தர்ப்பங்களில் அவன்ரை இவன்ரை காலிலை கையிலை விழுந்து ஒவ்வொரு 'ஸ்ரே'ஜாகப் 'பாஸ்' பண்ண வைத்திருக்கிறன்.. ஒண்டென்று விட்டிட்டு இருக்க முடிந்ததா...? பலதையும் பத்தையும் ஒரு நேரத்தில் பாத்தாத்தான் ஊருணிக்கு நீர் வரும். வாற வெள்ளம் கொஞ்சம் தங்கும்...

யானைப் பலமும் ஞாபகமும் வேண்டுமே.

நிலத்தில் விழுந்த ஊசியையும் பொறுக்கி எடுக்கத்தான் வேண்டும்..

ஊசிபோக இடம் விட்டால், உலக்கையும் போய்விடும்...

நினைவுக் கிளையின் பிறிதொரு கிளை.

அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் துயில் எழுந்திருத்தல் அவரது வழக்கம். எல்லோரும் விடியற்காலை குளிரிலே குதிரும் உறக்க இன்பத்தில் மூழ்கிக் கிடப்பார்கள். 'பிளாஸ்'கிலிருக்கும் கோப்பியைத் தானே ஊற்றிக் குடிப்பார். இருபது மைல்களுக்கு மேல் கார்களிலும், லொறிகளிலும், வசதிபோல பஸ்ஸுகளிலும் தொற்றி 'சேர்கிட்'டை முடிப்பார். ஆங்காங்கு 'கொந்தராத்து'த் தளங்களைப் பார்த்து, அததற்குத் தேவையான மணல், சீமேந்து, ஷீற் ஒழுங்குகளைக் கவனித்துத் திரும்புகையில் மணி எட்டை நெருங்கும். வந்ததும் வராததுமாக நாலு வாளியைத் தலையில் ஊற்றிக் கொண்டு எதையாவது கொறித்துவிட்டுப் பள்ளிக்கூடத்தை நோக்கிச் சைக்கிளைத் தள்ளுவார். பள்ளிக்கூட வேலையோடு அலுத்துப் போகிறவரல்லர். இரவு எத்தனை மணிக்கு அலுவல்கள் ஓயுமென்பது அவருக்கே தெரியாது.

ஒரு யானையை மட்டும் அதிகமாக வைத்துக்கொண்டு மோகனை மடக்கிவிட முடிய

வில்லே. யானையின் நேர்ப்போக்கு மூலேக்குள் மடக்கியடிக்கும் தன்மையற்றதே. மோகனின் அரசனுக்கு அங்குமிங்கும் ஒரு குறியற்றவாறு அலேய வேண்டிய நிலேயேற்பட்டிருக்கிறது. நாலு, ஐந்து 'மூவ்'கள் மூச்சுவிட அவகாசங் கிடைத்தால் காலாளே ஏற்றிவிடலாம். ஆட்டத்தின் போக்கும் மாறும். ஆனல், மூச்சுக்கு மூச்சு 'செக்'காகவே இருக்கின்றதே... அரசனில் வைத்த கையை எடுக்காமலேயே, ஒவ்வொரு 'செக்'கிற்கும் ஒவ்வோர் இடமாகத் தள்ளிக் கொண்டிருக்கின்ருன்.

ஊதாரித்தனமாகக் காய்களே இழந்ததால் ஏற்பட்ட தவிப்பு.

எத்தினே பேருக்கு எத்தினே இடத்திலே 'அப்போயின்ட்மெண்ட்' எடுத்துக் குடுத்திருக்கிறன். அந்தப் பொடியனும் என்னவோ கவனமாகவாழ்ந்து, கச்சிதமாக மூன்று நாலு சேர்த்திருக்கிருங்கள்.

இவனுக்கு, என்ன வந்தாலும், தாங்குவதற்குத் தாராளமாக இருக்கிறது என்ற எண்ணம்.

'இங்கை இந்த அலுவல்களேப் பாக்க விருப்பமில்லாட்டில் கொழும்பிலே போய்ப் படியன்' என்று அனுப்பினன். அங்கே வெட்டிப் பிளந்தது எதுவுமே யில்லே.

நாகரீகப் பழக்கங்களுடன் வந்து சேர்ந்திருக்கிருன்!

உழைத்துச் சேர்க்க வேண்டாம்; சேமித்து வைத்துள்ளதை அதம் போகாது பேணவாவது தெரியுமா?

செட்டாகச் செலவழித்து, உடலே வருத்தினுத்தான் செல்வம் எங்களோடை தங்கும். றெயிலடியிலே இருந்து வீட்டுக்கு வாடகைக் காரிலே வந்திறங்கத் தெரியாதே? வீணுக ஏன் இரண்டு ரூபா குடுப்பான். சைக்கிளே றெயிலடியில் கொண்டு வந்து மோகன் வைச்சிட்டுப் போனல் சிலவு பிச்சம்.

ஆனால் அவன் . ?

சைக்கிளை றெயிலடியிலே எனக்காக வைத்துவிட்டு, வாடகைக் காரிலே அவன் வீட்டுக்கு வந்துவிடுவானும் .. இதைப் பார்க்கத் தாய்க்காரிக்குப் பகிடியாகவும் இருக்கிறதாம்.

மோகனது அரசன் தனியனாகிவிட்டான். காலாள்கள் வெட்டப்பட்டு விட்டன.

பெரியவர் தனியனாகக் கிடந்து மீண்டும் பழங் கணக்குப் பார்க்கின்றார்.

புதுக் கணக்கு ஆரம்பிக்க வேண்டியவன் தனி அரசனைக் காப்பாற்றும் பிரயத்தனத்திலே தவிக்கின்றான். ஆரம்ப கட்டங்களில் இழைத்த தவறுகளின் கூட்டு மொத்தம் போக்கிடமில்லாத அவதியை உண்டாக்கியிருக்கிறது.

நண்பனுடைய சிந்தனையற்ற ஒரு 'மூவ்'... 'செக்' அல்ல ஆனாலும், மோகனின் அரசனால் எங்கும் செல்ல முடியாத நிலை.
'ஸ்ரேல் மேற்!'

'ஒபீஸ்' அறையில் 'டெலிபோன்' மணி கிணுகிணுக்கின்றது.

'தம்பி, என்னெண்டு போய்க்கேள்...'

பெரியவர் கட்டிலிற் கிடந்து குரல் கொடுக்கின்றார்.

"ஓம்..." என்று உரத்துக் கூறியபடி மோகன் டெலிபோனை நோக்கிச் செல்கின்றான்.

நண்பன் ஆட்டப் பலகையை வெறித்துப் பார்த்தபடி யிருக்கின்றான்.

"என்னவாய்?"

கட்டிலிலே சுருண்டு கிடக்கும் பெரியவர் கேட்கின்றார்.

சதுரங்கம்

இத்தலைப்பில் காலாள், குதிரை, தேர் என்னும் மூன்று கதைகள் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளன. இறுதிக் கதையான யானையுடன் இத்தொடர் நிறைவுறுகின்றது.

முற்றிற்று

## அரசு வெளியீடுகள்

தோணி வ. அ. இராசரத்தினம் - ஸ்ரீ லங்கா சாகித்திய
மண்டலப் பரிசு பெற்ற
சிறுகதைத் தொகுதி விலை. ரூ. 2/-

வாழையடி வாழை க. செபரெத்தினம்
-வாழ்க்கை வரலாறு விலை. ரூ. 2/-

பகவத்கீதை வெண்பா புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
- சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற
கவிதை நூல் விலை. ரூ. 3/50

இளமைப் பருவத்திலே! எம். ஏ. ரஹ்மான் - நூல் நிலையத்
துக்குரிய சான்றிதழ் பெற்ற சிறுவர் இலக்கியம்
(இரண்டாம் பதிப்பு) விலை. ரூ. 1/25

மரபு எம். ஏ. ரஹ்மான் - உருவகக்கதைகள்
(வண்ணச் சித்திரங்களுடன்) விலை. ரூ. 2/-

ஈழத்து இலக்கிய வளர்ச்சி இரசிகமணி கனக. செந்திநாதன்
- ஈழத்தின் தற்கால இலக்கிய வரலாறு கூறும்
வரலாற்று நூல் விலை. ரூ. 3/50

அண்ணல் கவிதைகள் கவிஞர் அண்ணல்
- கவிதைத் தொகுதி விலை. ரூ. 2/25

பரியாரி பரமர் -'சாணு'- பேனுச் சித்திரம் விலை. ரூ. 1/90

இலக்கிய உலகம் - வி. கந்தவனம்
- கவிதை நூல் விலை. ரூ. 1/40

காப்பியச் சொற்பொழிவுகள் - பத்துக் காப்பியங்கள் பற்றிய
ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் விலை. ரூ. 3/50

புதுயுகம் பிறக்கிறது - மு. தளையசிங்கம்
- சிறுகதைத் தொகுதி விலை. ரூ. 2/75

மஹாகவியின் குறும்பா - 100 குறும்பாக்கள், 'சௌ'வின்
50 சித்திரங்களுடன் கூடியது. விலை. ரூ. 1/85

ரசிகர் குழு போட்டிக் கதைகள் - போட்டி மூலந் தேர்ந்த
சிறுகதைகளின் தொகுப்பு விலை. ரூ. 1/30

வீ எஸ். பொன்னுத்துரை
சிறுகதைத் தொகுதி விலை. ரூ. 4/40

நபிமொழி நாற்பது - ஆ. மு. ஷரிபுத்தீன் விலை. ரூ. 1-50

முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம் - எம். கே. செய்யிது அஹமது
விலை. ரூ. 4-75

இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள்
-தொகுப்பு நூல் விலை ரூ 6-00

ஞானப் பள்ளு - கலாநிதி ஆ. சதாசிவம் விலை ரூ 4-00

அரசு வெளியீடு

231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13, இலங்கை.

?




கொண்டோடி சுப்பர்

அளிக்கும்

# பந்த நூல் மூலமும்

நச்சாதார்க்குமினியருரையும்



சு. நீங்கள் மாற்றப்படுவதற்குரிய உத்தரவு
ரு. போட்டாகிவிட்டது
சா. ஆண்டவன் உதவியால் அடுத்த கிழமை அளவில்
எ. உங்களுக்குக் கட்டளை கிடைக்கும்
அ. அவருக்கு நான் வாக்குப் பண்ணியதில்
கூ. ஒரு பகுதியை வேறு வழிகளால்
க0. கிடைத்ததைக் கொண்டு நிறைவேற்றியுள்ளேன்
கக. இன்னும் ஒரு பகுதி இருக்கிறது
கஉ. ஆண்டவன்தான் அதற்கும் உதவி செய்ய வேண்டும்,

சு. நீங்கள் மாற்றப் படுவதற்குரிய உத்தரவு—(மச்சானு கிய) நீர் மாறிச் சென்று வேலை பார்ப்பதற்குரிய உத்தரவுக் குறிப்பு,

உத்தரவு, ஆங்கிலப் பண்டிதர் 'மினிற்ஸ்' என்று வழங்கிய சொல்லிற்குப் பந்த தூதர் அறி முகப்படுத்திய செந்தமிழ்ச் சொல்லென்க. பந்த நாதர் ஆவணக் கோவையில் இடமாற்றஞ் செய் வதற்காம் அதிகாரத்தைத் தம் கைப்பட வரைந்து வைக்கும் குறிப்புரையே ஈண்டு உத் தரவெனப்பட்டது

ரு. போட்டாகிவிட்டது—எடுத்த பணி நிறைவுற்றது. உத்தரவு போடுவித்தலின் செயற்கருந் தன் மையை வியந்தவாறு. மச்சானுக்கு வரைந்த மங்கல வாழ்த்தென்க.

சா. ஆண்டவன் உதவியால் அடுத்த கிழமை அளவில்— இறைவனின் சகாயத்தினுல் அடுத்த வாரத் திலே,

ஆண்டவன், பந்த நாதரையே குறித்தது. இவர் திறம் முன்னர்ப் பாயிரத்துட் கூறினும்.

இவ்வாண்டவனிடத்து உதவிதான் எங்ஙனம் பெறப்பட்டதென்பதனைப் பின்னர் நூலின் கருத் துட் கூறுவாம். இங்ஙனம் உதவி பெறல் மரபென் பதனையும் அவண் விளக்குவாம்.

கிழமை, உரிமையைக் குறித்ததன்று; நானூற் றிருபது நாழிகை கொண்ட கால எல்லையைக் குறித்தது. கிழமையைத் தொடர்ந்து வரும் 'அளவில்' என்னுங் கிளவி இதனைக் கோடி காட்டா நின்றது.

எ. உங்களுக்குக் கட்டளை கிடைக்கும்—(மச்சானுகிய) நுமக்கு மாறுதற் கடிதம்1 வந்து சேரும்.

கட்டளையாற் பிறக்கும் கடிதத்தைக் கட்டளை யென்றது ஆகுபெயராம். கட்டளை பிறப்பிக் கும் முறையை ஆங்கிலேய துரைத்தனம் புகுத் தியதென்பர் வரலாற்று நூலார். இத்துணை பழைமை சான்ற சொல்லை எடுத்தாளும் ஆசிரி யரின் தொன்னூலறிவு அறிந்து போற்றுதற் குரியது.

---

1. சொற்பஞ்சத்தால் அல்லலுறும் மொழிபெயர்ப் பாளர் பலரும் Minutes, Order என்னுஞ் சொற் களையும் ஒன்றேடொன்று குழப்பிக் கட்டளை என்றே மொழிபெயர்த்து மயங்கவும், நூலா சிரியர் பந்த தூதர் அவற்றினை முறையே உத் தரவு, கட்டளை எனப் பெயர்த்து அவற்றின் நுண்ணிய வேறுபாட்டினை உணர்த்துந் திறன் உவகைக்குரியது. மொழிபெயர்த்தியாத்தற் கலைக்கண் அன்னருக்குள்ள நுண்மாணுழைபுலம் விளைவிற்கிடமின்றி வெள்ளிடை விலங்கலாய் விளங்கல் காண்க.

கருப்பம்: நாற்று வளர்ந்து கருவுற்று (குடலைப் பயிராகி) உட்பொருள் போதித்து கருப்பம் முற்றி நிற்றல் போல ஆசிரியர் நுவல எடுத்துக்கொண்ட பொருள் முற்றி நிற்பது.

அ. அவருக்கு நான் வாக்குப் பண்ணியதில்— இறைவனுக்கு (அவர்) பந்த தூதர் (நான்) கொடுப்பதாக உறுதி கூறியதில்,

அவர் என்பது பந்த நாதர் என்ற ஏற்புடைக் கடவுளேயே குறித்தது; அவர் திறம் முன்னர்ப் பாயிரத்துட் கூறினும்.

வாக்குப்பண்ணியது, வாக்களித்த காணிக்கைத் தொகையைக் குறிக்குமாதலின் ஆகுபெயர். பண்ணியது + இல்; ஐந்தாம் வேற்றுமை2. நீக்குதற் பொருளாக வேற்றுமை செய்தது3. 'நான் வாக்குப் பண்ணியதில்' என்றூர் ஆசிரியர் எதனுலெனின் 'மச்சாளுகிய நீர் நும் மாறுதல் விடயமாக எவ்வாற்றானும் முயலா

---

2. ஏழாம் வேற்றுமை யெனக் கொள்வாருமுளர்.

3. எல்லைப் பொருளாக நின்று வேற்றுமை செய்தது என்பாருமுளர்.

திருந்தீராக யானே உம் பொருட்டு முயன்று தூது சென்று பந்த நாதரைத் தரிசித்துப் பெருஞ் சிரமத்துடன் விடயத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளேன்' என்பதைக் கூறியும் கூருதது போற் கூறி விளக்கற் கென்க. இங்ஙனம் ஆசிரியர் கூறியது, 'தன்னுடை யாற்ற லுணராரிடையினும் தன்னைப் புகழ்தலுந் தகும் புலவோற்கே' என்பதனுலாம்.

கூ. ஒரு பகுதியை வேறு வழிகளால்—ஒரு பின்னத்தை எதிர்பார்த்த வகையானன்றி வேறு மார்க்கங்களால்4,

க0. கிடைத்ததைக் கொண்டு நிறைவேற்றியுள்ளேன்— கிடைத்த பொருளைத் துணைப் பற்றிப் பூர்த்தியாக்கினேன்.

ஒரு பகுதியை, பந்த நாதருக்கு வாக்குப் பண்ணிய காணிக்கைப் பொருளின் ஒரு பகுதியை எனப் பொருள் கூறுக. அப்பொருட் குவையினை முற்றிலும் பெற்ற பின்னரே உத்தரவு போடுதல் வழக்காயிருப்பவும் பந்த தூதரிற் கொண்ட

---

4. மார்க்கம் என்பதற்குச் சமயம் என்றும் பொருள். சமயம் என்பது சமயத்திற்கு உதவும் வழி. எனவேதான், வழிக்கு மார்க்கமென நச்சாதார்க்குமினியர் உரை வகுத்தாரென்க.

பாந்தத்துவமே காரணமாக ஒரு பகுதியை முற்றுகையாக5ப் பெற இணங்கினரென்க. பந்த நாதர் இங்ஙனம் பொருள் சேர்த்தலின் இஃது, 'அருளொடும் அன்பொடும் வராப் பொருளாக்கம்'6 அன்றே எனக் கடாவுவாருமுளர்7. அன்னார் அளியர். மெல்லவந்து தம் நல்லடி பொருந்தும் நல்லடியார், தூதருடாய் செலுத்தும் காணிக்கை.

இன் சொல்லால் வருவது. ஈரமளைஇ வருவது. அது படிறிலவாஞ் செம்பொருள்8. அதனைப்

---

5. பாட.பேதம்; அச்சகாரம். Advance என்பர் ஆங்கிலர்.

6. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரளவிடல்.—குறள்: 755.

7. அங்ஙனம் கடாவியோருள் முதன்மையானோர் 'மருதூர் இரட்டையர்' ஆவர். மார்க்க சீரியர், மார்க்க சூரியர் என்னும் இவ்விரட்டைப் புலவர்கள் கடிகை முத்துப் புலவரின் மாணாக்கரென்றும் உமறுப்புலவர் காலத்தவர் என்றும் கருதப்பட்டு வந்தனர். ஆயின், மேதகு தமிழாசான் ஜே. எம். எம். அப்துல் காதிர்‡ அவர்கள் தமது 'இலக்கியத் தேன்மழை' என்னும் ஆராய்ச்சி நூலில் 'தமிழ் வளர்த்த மருதூர்' என்ற கட்டுரையில் இவர்களைப்பற்றி ஆராய்ந்து கூறியுள்ளமை வருமாறு:- மருதூர் ஆஸ்தானத்தில் தலைமைப் புலமை நடத்திப் பெரும்புகழ் ஈட்டிய சாகித்திய சாகரம் ஆசிரிய சிரோன்மணி சாமித்தம்பி நாவலருக்கு முன் அப்பீடத்தை அலங்கரித்தவர் வியாகரண சிந்தாமணி வயிரமுத்து உபாத்தியாயராவர். அப்பெரும் புலவரின் முதன் மாணாக்கராய் எண்ணப்பட்டோர் மருதூர் இரட்டையர். இவ்விருவரும் இடையிடையே வித்துவக் காய்ச்சலாற் பீடிக்கப்பட்டு வருந்திய போதிலும் பெரும்பாலும் ஒற்றுமை மிக்காராய் விளங்கிய மையின் இரட்டையரெனப் போற்றப்பட்டனர் இவர்களுள் மார்க்கசீரியர் என்பார் ஞானரைக் கடிந்த நன்னூல் பதிப்பித்தும், நபிமொழி நாற்பது தொகுத்தும், நாயகர் தாயகம் தரிசித்தும் நற்புகழ் கொண்டார். மார்க்க சூரியர் தமது 'சூரிய சித்தாந்தம்', 'வைத்திய சித்தாந்தம்' என்னும் புரட்சிக் கருத்துக்களை வித்தி அழியாப் புகழ்படைத்து விளங்கினர்.

8. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.
—குறள்: 91

---

அடிக்குறிப்புக்கு அடிக்குறிப்பு:

‡அப்துல் காதிர் அவர்கள் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம், ஏறாவூர் மகா வித்தியாலயம் முதலிய உயர் கல்வி நிலையங்களில் அதிபராக விளங்கி, அரும்பெருங் கல்வித் தொண்டுகளும் இயற்றியவராவர்.

பந்த நாதர் ஏற்குங்காற் பத்தரடையும் பதவிப் பேறுகள் தாம் எத்துணை உயர்வுடையன9? எனவே, 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்' என்பார் அறிவின் வறியரா மென்க. இங்ஙனம் கூறுவாருமுளர் என்பதினுற் போலும், இப் பணயத்தினை10ப் பந்த நாதர் தாமே கைப்படப் 'புல்லார்' ஆயினுர். தூதர், தூதியர், தரகர் என்றித் தொடக்கத்தினுர் பெற்றுப் பந்த நாதர் பெருந் தேவியாரிடை உய்த்துப் 'புரளவிட்'டுத் தம் தரகினைப் பெற்றுச் செல்வாரே யன்றிப் பந்த நாதர் இக்காணிக் கையைக் கையாற்ருனுந் தொடுவாரல்லர்.

வேறுவழிகளால் என்பது பந்தம் 'அடித்த' பல் வேறு வழிகளுள் ஒரு சிலவற்றைக் குறித்தது. உய்த்துணர வல்லார்க்குப் பெரு விருந்தாய சொற்ருெடர். அவ்வழிகளாற் கிடைத்த தொகையைக் 'கிடைத்தது' என ஆகுபெயராற் கூறினுர். இங்ஙனம் பொருளீட்டலின் ஈடற் கருமையை விளக்குவான் 'கிடைத்தது' என் ருர். வேறெவர்க்கும் கிடையாமையைக் காட்டும். இனி, வேறு வழிகள் தாமெவையோ எனிற் கூறுதும். பரந்த மனப்பண்பினுற்றிலே நடந்து எவர் பொருளும் தம் பொருளே எனப் போற்றும் பாங்கினுல் மனு நூலிற் கூறப்படும் பதினெண் விவகாரப் பதங்களுள் எதனுனும் பொருளீட்டும் வழிகளௌன்க. அவை தாம்: i) கடன் கோடல் ii) அடைக்கலமாகக் கொடுத்து வைத்த பொருள் உடையனல்லான் விற்றல் iii) கூடி மேம்படல் iv) நல்கியதை நல்காமை v) கூலி கொடாமை vi) கட்டுப்பாடு கடத்தல் vii) விற்றுக்கொண்டு ஒப்பாமை viii) ஆண்டானடிமை வழக்கு ix) எல்லை வழக்கு x) கடுந் தண்டம் xi) கடுஞ் சொல் xii) களவு xiii) வன் செய்கை xiv) பிறன்மனை வவ்வுதல் xv) மாதராடவர் முறை xvi) தாயபாகம் xvii) சூது xviii) ஒழிபு என்னும் பதினெண் பதத்தவாம். பிறர்வயிற் பெற்ற பந்தமும், ஊரை விற்ற தொகையும் 11, கார் வாங்கத் திரட்டிய பொற் குவையும்12 இதனுள் அடங்கல் காண்க. வருந் தாது பொருள் குவிக்கும் வழிகள் பலவும் அறிய விரும்புவோர், 'கல்லறைக் காவலர் இழிதிருக் கௌிகண்ணனுர்' இயற்றிய 'அபின் ஊண் அந்

9. அவர்கள் உளங் குளிர்ந்து பூரித்தலடையும் உவகைப் பெருக்குக்கு உவமையுமுண்டோ?

10. வேசிக்குக் கொடுக்கும் ஊன்விலையெனப் பொரு ளமையாது, பொருத்தப் பணமெனப் பொருள் அமைந்தது.

11. அகமதியனுர் வெளியிட்ட 'பந்தப் பெருங் கதை' — ஊர்கோள்வரியில் (நிழற்படச் சித்தி ரப் பதிப்பு) இதன் விரிவைக் காண்க.

12. 'இரசிதர்' முதல்வராய 'நானுதிசை நூற்றுவர் சாரணர்' தொகுத்தவை.

தாதி', 'காணிக்கை உண்டியற் சலம்பம்' என்பவற்றான் அறிக. 'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் '13 என எல்லாருஞ் சிறப்புச் செய்தற்கான பொய்யா விளக்கமாம் ஒண் பொருளை எனைத்தானுந் தேடல் அறமெனக் கொண்டார் ஆசிரியர் என்க.

நிறைவேற்றியுள்ளேன் என ஆசிரியர் இந்நிகழ்ச்சியினை மச்சானுக்கு எடுத்துக் கூறுவது எடுத்துக் காட்டணி என்க இலஞ்சப் புகழ்ச்சியணி14 எனினும் அமையும். ஆசிரியர் தம் உயர்வு கூறுகின்றாரெனக் கொண்டு உயர்வு நவிற்சியணி என்பாருமுளர். ஆசிரியருக்கு அது கருத்தன்று; அவர் காரியவாதியே யன்றி ஆரவார நீர்மையர் அல்லாராதலின் ஈண்டு அது தன்மை நவிற்சியணியே என மறுக்க. இனி, பொருள் கொடுத்து உதவி பெறல் தமிழன் மரபாதல் யாங்ஙனம்? அது யாகம் முதலியவற்றைத்

13. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்.
—குறள்: 759.

14. இலஞ்சத்தின் மகிமையை யாண்டும் பரப்பற்கு இங்ஙனம் நிறைவேற்றிக் காட்டலாய தொழிலுடன் அதனைப் போற்றிக் கோடலும் இன்றியமையாத இலஞ்சப் புகழ்ச்சியணியாகியது.

தென்னகத்திற் புகுத்திய ஆரியர் மரபு15 அல்லேயோ எனக் கடாவின் கோடலும் கொடுக்கலும் தமிழ் மரபே என்க. என்னை?

'கைப் பொருள் கொடுத்துங் கற்றல்,
கற்றபின் கண்ணுமாகும்'16 எனவும்,

'எண்ணிப் பத்து அங்கை இட்டால்17 இந்திரன்
மகளுமாங்கே
வெண்ணெய்க்குள் றெரியுற்றாற்போல் மெலிந்து
பின்னிற்குமன்றே'

எனவும் வரும் சிந்தாமணியாலும்,

15. அறிஞர் அண்ணா எழுதிய 'ஆரிய மாயை' என்னும் நூலிலே இம்மரபுகளை அறிக.

16. சீவகசிந்தாமணி—கனகமாலையாரிலம்பகம்:39.

17. பத்து என்ற எண்ணைக் காரிய சித்திக்கு உகந்த எண்ணெனக் கவிஞர்கள் கருதினார்கள்போலும். 'கைத் தலத்தில் பத்து முத்தை '† என மஹா கவியின் குறும்பாவில் வரும் அடி இதனுடன் ஒப்பு நோக்கத் தக்கது.

அடிக்குறிப்புக்கு அடிக்குறிப்பு:
† முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்.
முன்னாலே வந்து நின்றான் காலன்.
சத்த மின்றி வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான். போனான் மூச்சூலன்!

'பாலும் தெளிதேனும்...' என்னும் பாடலில் 'நாலும் உனக்குத் தருவேன்... நீ எனக்கு மூன்றுந் தா' என அவ்வையார் பாடியதாலும் இலஞ்சம் கொடுத்துப் பயனெய்துதல் தமிழ் மரபே என்பதனை அறிக.

கக. இன்னும் ஒரு பகுதி இருக்கிறது—முற்பணம் போக மிச்சிலாயுள்ள பகுதியும் ஆண்டவனுக்குக் கொடுபட இருக்கிறது.

கஉ. ஆண்டவன்தான் அதற்கும் உதவீ செய்ய வேண்டும்—இறைவனே இதற்குஞ் சகாயமாக நிற்றல் வேண்டும்.

ஈண்டு வரும் இந்த இரண்டாம் ஆண்டவன் முன்னையவனின்றும் வேருனவனென்க. தீமை நடத்தல் கண்டிருந்தும் 'ஒப்பநாடி அத்தக ஒறுத்தலை'யும், அடியவர்க்கு அருள் பாலித்தலையும், அடுத்த உலகு வரை பிற்படுத்தி வைக்கும் இறைவன் 18, பந்த நாதர், பந்த தூதர் உட்பட நல்லார் பொல்லார் எல்லார்க்கும் அருளும் தெய்வம்19. அரசின் நீதிக் கரங்களுக்குட் சிக்குப்படாமற் காப்பவன் இவனேயாதலின் இவனை மறவாத ஆசிரியரின் நன்றி மறவாமை, இறையச்சம் என்பன ஈண்டு போற்றற்குரியன.

(தொடரும்)

18. & 19. இஸ்லாமியத் திருநெறி வல்லார் கூறும் இறைவனின் பண்பிலக்கணப் பரியாய நாமங்களுள் ரஹீம் இப்பொருளுக்குக் கூறப்படுதலையும் (54), ரஹ்மான் என்னுந் திருநாமத்திற்கு 'நல்லார் பொல்லார் எல்லோருக்கும் அருளுவோன்' என்னும் இப்பொருள்(55) கூறப்படுதலையும் ஈண்டு ஒப்பு நோக்குக.

ரகுராமனின்

## கதை வளம்

### விமர்சன ஏடு

முதலாம், இரண்டாம் ஏடுகள் வெளிவந்துள்ளன. ஈழத்திற் பிரசுரமான சிறுகதைகளை விமர்சிப்பதோடு, சிறுகதை இலக்கியஞ் சம்பந்தமான ஆக்கபூர்வமான ஆய்வும் இடம் பெற்றுள்ளது.

முதலாம் ஏடு விலை சதம் **50**
இரண்டாம் ஏடு விலை சதம் **60**

வெளியீடு


**மரபு நிலையம்**

231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13, இலங்கை.

# மருந்துகள், வைத்தியர்கள், நோய்கள்.

## DRUGS, DOCTORS AND DISEASE

சாதாரண தலையிடிக்கும், காய்ச்சலுக்கும் மேற்கு நாட்டிலே தயாரிக்கப்பட்ட குளிகைகளை நாடுவது இன்று இங்கு பெருவழக்காயிற்று. தடிமன் காய்ச்சலுடன் வைத்தியரிடஞ் சென்றால் சக்தி வாய்ந்த நவீன மருந்துகளையே (modern drugs) அவரும் கொடுப்பார். வானொலியிலும், படத்திரைகளிலும், பத்திரிகைகளிலும் நவீன மருந்துகளைப் பற்றி ஓயாது விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆதலால், இவையின்றி நாம் உயிர் வாழமுடியாது என்ற நிலை உருவாகியுள்ளது. மருத்துவத்துறையைப் பொறுத்தமட்டில் நாம் இன்னும் குடியேற்ற நாட்டு நிலையிலேயே இருக்கின்றோம். நாட்டு வைத்திய முறைகளை வளர்ப்பதற்கு அரசாங்கம் ஒரு சில முயற்சிகளைக் கையாண்டுள்ள போதிலும், அவை அதிகம் வெற்றியளிக்கவில்லை. மக்களுட் பலர் மேற்கத்திய வைத்திய முறைகளையே பெரிதும் விரும்புகின்றார்கள். இதனால், நாட்டு வைத்தியம் உயிர் வாழ்கின்றதே ஒழிய செழித்தோங்கவில்லை.



மேற்கத்திய மருத்துவ முறை அதிக வெற்றியீட்டியிருப்பதனாற்றான் மக்களும், வைத்தியர்களும் அதனைப் பெரிதும் ஆதரிக்கின்றனர் என்றும், இதன் விளைவாக நாட்டு வைத்திய முறைகள் செல்வாக்கிழப்பது தவிர்க்க முடியாததும் இயல்பானதும் என்றும் பலர் சமாதானங் கூறலாம். மேற்கத்திய மருத்துவம் நோயைக் குணப்படுத்துகின்றதா அன்றி நோயின் அறிகுறிகளை ஒழிக்கின்றதா என்பதனைத் தெளிவுபடுத்திக் கொண்டால் இவ்வெற்றியின் இரகசியத்தைப் புரிந்து கொள்ளுதல் சாலும்.

மருந்துகள், வைத்தியர்கள், நோய்கள் என்ற நூலிலே பிறையன் இங்கிளிஸ் (Brian Inglis) என்பவர் மேற்கு நாடுகளிலே மருத்துவர்கள் நோயாளிகளுக்குக் கொடுக்கும் நவீன மருந்துகள் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியும், மருந்து உற்பத்தித் தொழில் பற்றியும் ஆராய்ந்

துள்ளார். அவர் கண்ட முடிவுகள் மேலே குறிப்பிட்ட விஞவிற்கு ஓரளவு விடையாகவும் அமைந்துள்ளது. இந்நூலிற்கு முன்பதாக அவர் 'சிறு வழக்கு மருத்துவம்' (Fringe Medicine) என்ற நூலினை எழுதினர். பிரித்தானியாவிலே இலவச உடல் நலசேவை தேசீய அடிப்படையில் இயங்கி வருகின்ற பொழுதிலும்துளையீட்டு மருத்துவ முறை (Acupumcture) வன்மப்பிடி மருத்துவ முறை (Osteophathy) போன்ற சிறு வழக்கு மருத்துவ முறைகள் ஏன் அங்கு செழித்தோங்கி வளர்கின்றன என்பதனை அந்நூலிலே அவர் ஆராயத் தலைப்பட்டார். மருத்துவர்கள் கட்டுப்பாடற்ற முறையிலே நவீன மருந்துகளைக் கையாளுவதனாற்ருன் பல நோயாளிகள் துளையீட்டு மருத்துவர் போன்றவர்களை நாடுகின்றனர் என்றும், இந்நவீன மருந்துகள் ஓரளவு நன்மையளித்த போதிலும், பல தீமைகளை விளைவிக்கின்றன என்றும் அவர் அந்நூலிலே விளக்கியுள்ளார்.

மருந்துகள், வைத்தியர்கள், நோய்கள் என்ற நூலின் அறிமுகத்தில், ஆசிரியர் இந்நூலினை எழுதத் தூண்டிய சூழ்நிலையை விளக்குகின்ருர். இருபதாம் நூற்ருண்டின் ஆருந் தசாப்தத்தின் நடுப்பகுதியில் ரெற்ருசைக்கிளின் என்னும் மருந்து பிரித்தானியாவில் அறிமுகமாயிற்று. அப்பொழுது ஆயிரம் மாத்திரைகளின் விலை 90 பவுணுய் இருந்தது. 1960ல் ஆயிரம் மாத்திரைகளின் விலை 60 பவுணுய்க் குறைந்தது ஆனல், 1961ல் ஒரு புதிய வணிகக் கம்பெனி இதே மாத்திரைகளில் ஆயிரத்தை 6 பவுண் 10 சிலிங்கிற்கு விற்கத் தலைப்பட்டது. இது பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியதுடன், ஒரு வழக்கிற்கும் வழிகோலியது. அப்பொழுது ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த பழைமைக் கட்சியின் உடல் நல அமைச்சர், இலவச உடல் நலத்திட்டச் செலவுகளை குறைக்கும் பொருட்டு இப்புதிய கம்பெனியிடமிருந்தே அம்மாத்திரைகளை வாங்குமாறு ஆணையிட்டார் இதனை எதிர்த்து இம்மாத்திரைக்கென தனிக் காப்புரிமை பெற்றிருந்த கம்பெனி வழக்குத் தொடுத்தது. ஆனலும், அதனல் வெற்றியீட்ட முடியவில்லை. மலைக்கும் மடுவிற்குமிடையே உள்ள ஏற்றத் தாழ்வினைப் போன்ற இவ்விலை வித்தியாசத்தினை துருவி ஆராய இந்நூலாசிரியர் முற்பட்டார். அவரது முயற்சிக்கு அமெரிக்க மூதவை உபகுழு ஒன்றினல் வெளியிடப்பட்ட அறிக்கை (இது கெவோவர் அறிக்கை என வழங்கும்) பெரிதும் உதவிற்று. பிரித்தானிய மருந்து ஆக்கத் தொழில், நடைமுறையிலே அமெரிக்கக் கம்பெனிகளின் ஆதிக்கத்திலே இருப்பதனல் கெவோவர் அறிக்கை பிரித்தானிய மருந்து ஆக்கத் தொழிலுக்கும் பொருந்தும் என நூலாசிரியர் சுட்டிக்காட்டுகின்ருர்.

புதிய மருந்துகளைத் தயாரிப்பதற்கு நீண்டகால ஆராய்ச்சி தேவைப்படுகின்றதென்றும், இதற்குப் பணத்தை வாரி இறைக்க வேண்டியிருக்கின்றதென்றும், இதனுற்ருன் மருந்துகளின் விலை அதிகமாயிருக்கின்றதென்றும், இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு தனிக்காப்புரிமை முறையே பெருந்தூண்டுகோலாய் அமைகின்றதென்றும் மருந்து ஆக்கத்தில் ஈடுபடும் கம்பெனிகள் வாதாடுகின்றன. இக்கூற்று

களை விரிவாக ஆராயும் பிறையன் இங்கிளிஸ் அவற்றினை ஆதாரபூர்வமாக மறுத்துரைக்கின்றார்.

மருந்து ஆக்கத்தொழிலின் வெற்றிக்கு தனிக் காப்பு உரிமை முறை இன்றியமையாதது எனப் பெரும் கம்பெனிகள் வாதாடுவது இயல்பே. அதன் மூலம் அதிக ஆதாயத்தினை அவர்கள் பெறுவதனால் அதனைக் கைவிட அவர்கள் விரும்பமாட்டார்கள். ஆனால் தனிக்காப்புரிமை முறையினாலே சமுதாயத்திற்கு நன்மை உண்டா என்பது நோக்கற்பாலதே. தனிக்காப்புரிமை முறை புதிய ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமளிக்கும் என்ற வாதம் பொருந்தாததென இங்கிளிஸ் சுட்டிக் காட்டுகின்றார். இதை ஆராய்ந்த கெவோவர் அறிக்கை தனிக்காப்புரிமை முறை இல்லாத நாடுகளிலேயே கூடுதலாகப் புது மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடுகின்றது. அவர்களுடைய கணிப்பின்படி, தனிக்காப்புரிமை முறையுள்ள நாடுகளிலே புதிதாகத் தயாரிக்கப்படும் ஒவ்வொரு மருந்திற்கும் அத்தகைய காப்புரிமை முறையில்லாத நாடுகளிலே பத்துப் புது மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஆதலால், நடைமுறையிலே தனிக்காப்புரிமை முறை புதிய கண்டுபிடிப்புகளுக்கும் தயாரிப்புகளுக்கும் முட்டுக்கட்டையாய் இருப்பது கண்கூடு என்கிறார் இந்நூலாசிரியர். இதனை விளக்குகையில் சட்ட விதிகள் இந்நடைமுறைக்கு அநுசரணையாய் இருக்கின்றதெனக் குறிப்பிடுகின்றார். காப்புரிமைச் சட்டத்தின்படி தனிக்காப்புரிமையைப் பெறும் கம்பெனி அம்மருந்தைத் தயாரிக்கும் முறையினை வெளியிடல் வேண்டும். இது போட்டியிடும் மற்ற கம்பெனிகளுக்கு வாய்ப்பளிக்கின்றது, அத் தயாரிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு அந்த மருந்தின் அணுத்திரண்ம அமைப்பினைச் (Molecular Stucture) சற்று மாற்றித் தமது மருந்து புதிய தயாரிப்பு எனக் காப்புரிமை பெற்று விடுகின்றன. ஆதலால், தனிக்காப்புரிமை முறை புதிய ஆராய்ச்சிகளையும் கண்டு பிடிப்புகளையும் தூண்டுவதற்குப் பதில் பெரும்பாலும் உருத்திரிபுகளுக்கே வழி கோலியுள்ளது. புதிய மருந்துகள் எனப் பறைசாற்றப்படுபவை பல, உண்மையிலே இத்தகைய உருத்திரிபுகளே. இத்தனிக்காப்புரிமை முறை, மருந்து ஆக்க விருத்திக்குத் தடையாய் இருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக இரண்டாம் உலகப் போர் காலத்திலே, அமெரிக்காவிலே பென்சிலின் தயாரிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் வரலாற்றினை இங்கிளிஸ் விரித்துரைக்கின்றார். போர் வீரர்களின் உயிரைக் காக்க வல்ல பென்சிலினை பெரிய அளவிலே தயாரிப்பதில் கம்பெனிகளை ஈடுபடச் செய்வதற்கு அமெரிக்க அரசாங்கம் முனைந்து அதற்கெனப் பிரித்தானிய ஆராய்ச்சியாளரின் உதவியினையும் பெற்றுக் கொடுத்தது ஆனால், அரசாங்கத்தின் முயற்சிகள் பலிக்கவில்லை. காரணம் பென்சிலினைத் தயாரிக்கும் வழிமுறைகளிலே தனிக்காப்புரிமையைப் பெற கம்பெனிகள் தமக்குள்ளே போட்டி போட்டமையே. ஒத்துழைப்பிற்குப் பதில் வழி முறைகளை அம்பலமாக்காது தமக்குள்ளே இரகசியமாக வைத்திருப்பதிலேயே அவை கண்ணும் கருத்துமாக இருந்தன. இதனால் எத்தனை உயிர்கள் மாண்டனவோ. இந்த இழி நிலை நீடித்திருக்கும். ஆனால், நற்பேறாக விவசாயப் பகுதியினைச் சேர்ந்த விஞ்ஞானிகள்

பென்சிலினை பெருமளவிலே தயாரிக்கக்கூடிய எளிய முறையினைக் கண்டு பிடித்தனர். வழக்கமாக கண்டு பிடிப்பாளருக்கு பயனீட்டாளர் பணம் செலுத்த வேண்டும் என்ற நியதி உண்டு. ஆனால் இவ்விடயத்திலே அந்த நிர்ப்பந்தம் இல்லாததனால் பென்சிலினைத் தயாரிப்பதற்கு எல்லாக் கம்பெனிகளும் முந்திக்கொண்டன. இவைகளுக்குள்ளே ஏற்பட்ட போட்டியின் விளைவாக விலையும் குறைந்தது.

தனிக்காப்புரிமை முறை இல்லாத விடத்து மருந்து விலைகளும் குறைவாக இருக்கின்றன என கெவோவர் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. தனிக்காப்புரிமை முறை ஆராய்ச்சியைத் தூண்டி ஈற்றிலே விலை குறைப்பிற்கும் வழிகோலும் என கம்பெனிகளுக்கு 'வக்காலத்து வாங்குபவர்கள்' கூறுவதுண்டு. ஆனால், உண்மையோ வேறு. தனிக்காப்புரிமை முறை உள்ள நாடுகளிலும் பார்க்க அம்முறை இல்லாத நாடுகளிலே மருந்துகளின் சராசரி விலைகள் குறைவாகவே இருக்கின்றன என கெவோவர் அறிக்கை கூறுகின்றது. அவர்களுடைய புள்ளி விபரங்களின்படி இச்சராசரி விலை வித்தியாசம் 255 வீதத்திலிருந்து 18 வீதம் வரை நிலவிற்று.

தனிக்காப்புரிமை முறை உண்மையான அடிப்படை ஆராய்ச்சிக்கு வழி கோலவில்லை என்றும், விலை குறைப்பிற்கு ஏதுவாயில்லை என்றும் மேலே கண்டோம். கண்டு பிடிப்பாளருக்கும் அது உண்மையான பாதுகாப்பு அளிப்பதாக இல்லை. தனிக்காப்புரிமைச் சட்டங்கள் கம்பெனிகளின் ஆதிக்கத்தினைப் பலப்படுத்தி அவர்களின் கையை ஓங்கச் செய்ததுடன் தனிக்கண்டு பிடிப்பாளருக்கும் இடர் விளைவிக்கின்றது. இவர் தனது கண்டு பிடிப்பின் முழுப்பயனையும் அநுபவிப்பதில்லை. கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொள்வது போல இவருடைய கண்டு பிடிப்பின் முழுப்பயனையும் கம்பெனிகளே நுகர்கின்றன. கெவோவர் குழுவின் ஆராய்ச்சியின்படி தனிக்காப்புரிமை பெரும்பாலும் கம்பெனிகளின் பெயரிலே இருக்குமேயன்றி கண்டு பிடிப்பாளரின் பெயரில் அன்று. ஆதலால், தனிக்காப்புரிமை முறை கம்பெனிகளுக்குப் பெரும் ஆதாயத்தினைப் பெற்றுக் கொடுக்கின்றதே ஒழிய சமுதாயத்திற்கோ, வேறு யாருக்குமோ நன்மை பயப்பதில்லை. அமெரிக்காவிலே ஆண்டிற்கு 200 கோடி டொலர் பெறுமதியான மருந்து ஆக்கத் தொழில் நடைபெறுகின்றது. இதில் 90 வீதம் 22 கம்பெனிகளின் கைப்பிடிக்குள் இருக்கின்றது. இவைகள் ஏனைய தொழில்களில் ஈடுபடும் கம்பெனிகளிலும் இரு மடங்கிற்கு மேலாக இலாபம் ஈட்டுவது குறிப்பிடத்தக்கது. சுருங்கச் சொல்லின் நோயாளிகளின் துயரம் இவர்களின் ஆதாயம்.

கோட்பாட்டின்படி முதலாளித்துவ அமைப்பிலே தடையற்ற போட்டிகள் நிகழ்வதால் விலைகள் குறையும், அதனால் நுகர்வோர் பயன் பெறுவர். ஆனால், நடை முறையோ இதற்கு முரணாக உள்ளது. இன்றைய முதலாளித்துவ அமைப்பிலே பெரிய கம்பெனிகளே ஆதிக்கம் செலுத்துகின்றன. சிறிய மீன்களைப் பெரிய மீன்கள் விழுங்குவது போன்று இவைகளும் சிறு கம்பெனிகளைத் தம்மோடு இணைத்துப் பலம் பொருந்திய தாபனங்களாய் விளங்குகின்றன.

இக்கம்பெனிகள் 'கழுத்தறுக்கும்' விலைப் போரிலே பெரும்பாலும் ஈடுபடுவதில்லை. மாறாக விளம்பரம் மூலமும், தமது தயாரிப்புகளுக்கு விசேட முத்திரையை ஏற்றுவதன் மூலமும் தமக்குள்ளே போட்டி போடுகின்றன. மாடுகளுக்குக் குறிசுடுவது போன்று தமது தயாரிப்புகளுக்கும் 'குறிசுட்டு', விளம்பரம் மூலம் மக்கள் மத்தியிலே அக்குறிகளுக்குத் தனிக் கவர்ச்சியினை ஏற்படுத்துகின்றனர். இவ்வுத்தியின் வெற்றியினை, நம் அன்றாட வாழ்விலே அவதானிக்கலாம். குறிப்பிட்ட வகைப் பால்மா இன்றேல் குழந்தைகளின் பாடு பெரும்பாடாகிவிடும் என பெற்றோரை நம்பப் பண்ணும் அளவிற்கு நவீன முதலாளித்துவத்தின் விளம்பரக்கலை வளர்ந்து விட்டது. இதே உத்தியைத்தான் மருந்து ஆக்கத் தொழிலில் ஈடுபடும் கம்பெனிகளும் கடைப்பிடிக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக இங்கிளிஸ் ஒரு சுவையான நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார். கம்பெனிகளுக்கிடையே உண்மையான போட்டி நடைபெறுகின்றதா எனக் கண்காணிப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் வணிகக்குழு ஒன்றினை நியமித்துள்ளது. போட்டியைக் கட்டுப்படுத்தி நுகர்வோரை 'கறப்பத'ற்காக கம்பெனிகள் இணைவதைத் தடுப்பதே இக்குழுவின் பணி. இக்குழுவினைச் சேர்ந்த ஓர் ஊழியரின் கணவர் ஒரு தடவை வைத்தியரிடம் செல்ல நேரிட்டது. தொண்டை அரிப்பிற்கு மருந்து கேட்கவே வைத்தியரும் அதற்கென ஒரு மருந்தினைக் குறித்துக் கொடுத்தார். இவர் மருந்துக் கடைக்குச் சென்று அதனை வாங்க விழைந்த போது அதன் விலையைக் கேட்டு திடுக்குற்றார். உடனே வைத்தியருடன் தொடர்பு கொண்டார். அவரும் அதன் விலையைக் கேட்டு அதிசயப்பட்டு வேறு இரு மருந்துகளைத் தகவுரை செய்தார். ஆனால் வேடிக்கை என்னவெனில், அம் மருந்துகளும் அதே விலைதான்! அவற்றைத் தயாரித்தவை வெவ்வேறு கம்பெனிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆராய்ச்சியிலே பணத்தைப் பெருவாரியாகச் செலவழிக்க வேண்டியிருப்பதனால் பெரும் ஆதாயம் இன்றியமையாதது என சில கம்பெனிகள் எடுத்துரைக்கின்றன. உண்மையான அடிப்படை ஆராய்ச்சியினை கம்பெனிகள் பெரும்பாலும் மேற்கொள்வதில்லை என்றும், அவை நடாத்தும் ஆராய்ச்சிகள் சமூகத்திற்கோ, நோயாளிகளுக்கோ நன்மை பயப்பதைவிட கம்பெனிகளின் ஆதாயத்திற்கே வழிகோலுகின்றன என்றும் ஆசிரியர் இடித்துரைக்கின்றார். ஆராய்ச்சியிலும் பார்க்க விளம்பரத்திலேயே கம்பெனிகள் கூடுதலாகச் செலவழிக்கின்றன என அவர் சுட்டிக்காட்டுகின்றார். இதற்கு ஆதாரமாக கெவோவர் அறிக்கையின் புள்ளிவிபரங்களைத் தருகின்றார். இருபத்திரண்டு அமெரிக்க கம்பெனிகளின் கணக்கறிக்கைகளின்படி ஒரேயொரு கம்பெனிதான் விளம்பரத்திற்குச் செலவழித்த தொகையில் அரைவாசியினை ஆராய்ச்சிக்குச் செலவிட்டது. மூன்று கம்பெனிகள், விற்பனையால் ஈட்டிய பணத்தொகையில் பத்து வீதத்தினை ஆராய்ச்சியில் செலவிட, ஏழு கம்பெனிகள் (முன்வரிசைக் கம்பெனிகள் உட்பட) ஐந்து வீதத்திற்குக் குறைவாகவே ஆராய்ச்சியில் செலவிட்டன. மிகுதியான பதினொரு கம்பெனிகளும் ஆராய்ச்சி

யில் செலவிட்ட தொகையிலும் பார்க்க ஐந்து தொடக்கம் பத்து மடங்காக விளம்பரத்திலே செல விட்டன. ஆராய்ச்சியிலும் பார்க்க விளம்பரத்திலே கம்பெனிகள் பணத்தை வாரி இறைத்தன என் பதே கெவோவர் அறிக்கையின் துணிபு.

தமது மருந்துகளை விளம்பரப்படுத்தும் போது கம்பெனிகள் கையாளும் உத்திகளை விபரிக்க ஆசி ரியர் தவறவில்லை. ஒரு தடவை ஒரு கம்பெனி தான் தயார் செய்த மருந்தினை விளம்பரப் படுத்திய போது பல வைத்தியர்கள் அளித்த சான்றிதழ் களையும் பாராட்டுக்களையும் வெளியிட்டது. இந்தச் சான்றிதழ்களைப் பற்றி ஐயுற்ற ஒருவர், விளம் பரத்திலே குறிக்கப்பட்ட வைத்தியர்களின் விலா சங்களுடன் தொடர்பு கொள்ள விழைந்தார். அவரது கண்டுப்பிடிப்பு — அப்பெயர்களைத் தாங்கிய வைத்தியர்கள் இல்லை என்பதே! இத்தகைய திருகுதாளங்களிலே ஈடுபடும் கம்பெனிகள் தமது மருந்துகளால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளை மூடி மறைப்பதில் அல்லது அதிகம் விளம்பரப்படுத் தாததில் வியப்பில்லை. அப்படிச் செய்யின், அது தற்கொலைக்கு ஒப்பாகும்.

நவீன மருந்துகளால் ஏற்படும் பாதக விளைவு கள் பற்றி மேல் நாட்டிலே ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. ஆதாயமே கம்பெனிகளின் முக்கிய குறிக்கோளாய் இருப்பதனுல், பாதக விளைவுகள் பற்றி அத்துணை அக்கறை கொள்ளாது தமது தயா ரிப்புகளை விற்க அவை முந்துகின்றன. இப் போக்

கிற்கு 'தலிடோமைட்' மாத்திரை நல்ல எடுத்துக் காட்டாகும். பரிசோதனைக்கும் போதிய அவகாசம் கொடுக்காது, அதனைத் தயாரித்த கம்பெனி அதனை விற்க முனைந்தது. கர்ப்பிணிகளுக்கு அதனை வைத்தியர்கள் கொடுத்தனர். விளைவு — அத்தாய் மார் சிலர் ஈன்றெடுத்த குழந்தைகள் அங்கவீனர் களாகப் பிறந்தனர். இதே போன்று புதிது புதி தாகத் தயாரிக்கப்படும எத்தனையோ மருந்துகள் பாதக விளைவுகளுக்கு வழி கோலுவதுடன், நோய்க் கிருமிகளுக்கு எதிர்ப்புச் சக்திகளையும் ஊட்டுகின்றன. இதனுல் இம்மருந்துகள் பயனற்றுப்போய் விடுகின் றன. வரையறையின்றி இத்தகைய மருந்துகளைப் பயன்படுத்துவதனுல், இம்மருந்துகள் இன்றி வாழ முடியாத நிலை சிலருக்கு ஏற்பட்டிருக்கின்றது என அவர் கூறுகின்ருர். இதுடன் இம்மருந்துகளைப் பரிசோதிக்கும் முயற்சியிலே மனிதர்களும், மிரு கங்களும் வீணே இம்சிக்கப்படுவதாக மேலும் சுட்டுகின்ருர்.

வைத்தியர்கள் கற்றறிந்தவர்கள், ஆதலால் அவர்களை எளிதிலே ஏமாற்ற முடியாதென சிலர் நினைக்கலாம் ஆனுல், உண்மை நிலை வேறு என ஆசிரியர் விளக்குகின்ருர். இன்று மருந்து ஆக்கம் பல்கிப் பெருகியுள்ளது. இந்நிலையில் வைத்தியர்கள் செய்வதறியாது திணறுகின்றனர். கம்பெனிகள் வெளியிடும் பிரசுரங்களே அவர்களுக்குத் தஞ்சம். தாம் தயாரிக்கும் மருந்துகளுக்கு எதிரான செய் திகளை கம்பெனிகள் விரித்துரைக்கும் என எதிர் பார்ப்பது முட்டாள் தனம். மேலும், சில வைத் தியர்கள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ

கம்பெனிகளிடமிருந்து சலுகைகளையும் நன்மைகளையும் பெறுகின்றனர் என்பதையும் மறுத்தலாகாது. இந்நிலையிலே வைத்தியர்கள் சமுதாயத்தினை கம்பெனிகளின் 'திருவிளையாடல்க'ளிலிருந்து பாதுகாப்பர் என முழுக்க முழுக்க எண்ணுவது தவறு.

நோய்களின் அடிப்படைக்காரணங்களை ஆராய்வதை விடுத்து, அறிகுறிகளைக் குணப்படுத்தும், அல்லது ஒழிக்கும் மருந்துகளைத் தயாரிப்பதிலே கம்பெனிகள் பெரும்பாலும் புலன் செலுத்தியிருக்கின்றன என ஆசிரியர் வற்புறுத்துகின்றார். இதற்கு எடுத்துக்காட்டாக இன்சுலினைக் குறிப்பிடுகின்றார். மூதன் முதல் அது தயாரிக்கப்பட்டபோது, அஃது நீரிழிவுக்கு எமன் என பறைசாற்றப்பட்டது. ஆனால்

## 'செகராசசேகரன்'

அக்கூற்று இன்று பொய்ப்பிக்கப்பட்டு விட்டது. கணையக் கோளாறுதான் நீரிழிவுக்கு அடிப்படைக் காரணம் என்ற நம்பிக்கை தவிடு பொடியாகவே, இன்சுலின் நோயின் அடிப்படைக்காரணத்தை அல்ல அறிகுறியையே குணப்படுத்துகின்றது என்பது புலனாயிற்று. இவ்வாறுதான் பல நவீன மருந்துகள் வெறும் அறிகுறிகளையே குணப்படுத்துகின்றன. இதனால் பாரதூரமான விளைவுகளும் ஏற்படலாம் என ஆசிரியர் எச்சரிக்கின்றார்.

சமுதாயத்தினைப் பாதுகாக்க வேண்டுமாயின் மருந்தாக்கத் தொழிலை நாட்டுரிமை ஆக்குவதை விட வேறு வழியில்லை. இதனை வற்புறுத்த ஆசிரியர் ஏனோ தவறிவிட்டார். கம்பெனிகளுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றினை அரசு கண்காணித்தல் நன்மை பயக்கும் என்ற தோரணையிலே ஆசிரியர் தனது நூலுக்கு முத்தாய்ப்பு வைக்கின்றார். சமூகத்தின் நலனை அல்ல, தமது சொந்த ஆதாயத்தினையே குறிக்கோளாகக் கொண்ட முதலாளிகள் வசம் மருந்தாக்கத் தொழிலை இனிமேலும் விடுவது மடமையிலும் மடமை; சமூக நன்மைக்கும் சொந்த ஆதாயத்திற்குமிடையே எப்போதும் முரண்பாடு இருந்தே தீரும். அது தவிர்க்க முடியாத நியதி. புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?

'மத்து' தொடரில் செகராசசேகரன் எழுதிய ஏழு கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. பல்வேறு துறைகளிலுமுள்ள நூல்களின் சாரத்தைப் பிழிந்து இக்கட்டுரையாசிரியர் இளம்பிறை வாசகர்களுக்கு அளிக்கின்றார். இத்தொடரை நிறுத்த எண்ணியிருந்த நாம், வாசகர்களின் வேண்டுகோளை ஏற்று, மேலும் தொடர்கின்றோம் என்ற நற்செய்தியினை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

—ஆ.ர்.

பரிதாமணாளன் அவர்களாலே தொகுக்கப்பெற்ற 'மலாயாவில் தமிழ்க் கவிதைகள்' என்ற நூலைப் படித்துச் சுவைத்தேன். இதனை மதிப்பிடும்படி இத்தொகுதியை எனக்கு அனுப்பியவர் அன்புகுன்று நண்பர் எம்.ஏ. ரஹ்மான் அவர்களாவர்.

மலைநாட்டில் தனித்துவ இலக்கியப் பணிகள் மேலோங்கி வருகின்றன. தமிழ் நாட்டு இலக்கியப் படைப்புக்கள்தாம் தரமானவை என்ற மனமயக்கம் தெளிந்து, மலேசியநாட்டுத் தமிழன்பர்கள் தமது எழுத்தாளர்கள் மீது நம்பிக்கை வைக்கத் தொடங்கிவிட்ட ஒரு சமூக நிலையை அவதானிக்க முடிகின்றது. இது மலைநாட்டு எழுத்தாளர் முயன்று ஈட்டியுள்ள காரிய சாதனையாகும். இவ்வெற்றியை அவர்களுக்கு ஈட்டிக் கொடுத்த பெருமை 'தமிழ் நேசன்' 'தமிழ் முரசு' போன்றவைக்கும் பிற பத்திரிகைகளுக்கு முரியதாகும். மலைநாட்டு எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து மலைநாட்டின் இலக்கியத்தை வளப்படுத்துதற் பொருட்டு ஆக்கபூர்வமான பணிகள் பல செய்த மலைநாட்டுப் பத்திரிகைகள் உண்மையிலேயே போற்றுதலுக்கு உரியன.

நூல்: மலாயாவில் தமிழ்க் கவிதைகள்

தொகுத்தவர்: பரிதா மணாளன்

வெளியீடு: அறிவு மலரகம்
18, அராப் வீதி, சிங்கப்பூர்-7

இலங்கையிற் கிடைக்குமிடம்:
அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13.

மதிப்பீடு செய்நர்:

**கவிஞர் வி. கந்தவனம் பீ. ஏ.**

கவிஞர் வி. கந்தவனம் பட்டதாரி ஆசிரியராவர். கவிதை அவருக்கு வெகு இளமையிலேயே, வெகு இயல்பாக வந்த கலையாகும். அவருடைய 'இலக்கிய உலகம்' என்ற கவிதைத் தொகுதி அரசு வெளியீடாகவும், 'சிட்டுக்குருவி' 'ஏனிந்தப் பெருமூச்சு?'

ஆகிய கவிதைத் தொகுதிகள் பிற வெளியீடுகளாகவும் வெளிவந்துள்ளன. இவர் யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவருமாவர். நாடக நடிகர்; ஓவியத்திலும் ஈடுபாடுடையவர்.

இக்கட்டுரையில் மலைநாடு எனக் குறிக்கப்படுவது மலேசியா நாட்டையே என்பதை ஈழத்து வாசகர்கள் மனதிற் கொள்வார்களாக.

மலைநாட்டின் கவிதை வளர்ச்சியில் 'மலாயாவில் தமிழ்க் கவிதைகள்' என்னும் தொகுதி ஓர் எல்லைக் கல்லாக அமைந்துள்ளது. தொகுதியிற் பல்வகைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஆயினும், தமிழ்ப் பற்றே நூல் முழுவதும் இழையோடி மிளிர்கின்றது. மொழிப்பற்றுக்குன்றியிருக்குங் காலங்களில் ஆன்றோர்கள் மொழியின் தொன்மையையும், அதன் வளத்தையும், இனிமையையும் எடுத்துக் கூறி மொழி வளர்ச்சியில் ஆர்வத்தை மக்களுக்கு ஊட்டுதல் இயல்பேயாகும். அதிரைதாசன், எஸ், எம், தீன், மகேந்திரன், மண்டலக்கிளி, மீசல் பி. எம். அபூபக்கர், முகவைச் செல்வன், முத்தமிழ்த்தாசன், முத்தமிழன், முருகிளவல், முருகுதாசன், வீரப்பன், செம்பியன் ஆகியோரின் கவிதைகள் இப்பணியையே புரியும் பெருநோக்குடையன. 'பொங்கியெழு தமிழ்த்தோழா பொங்கியெழு என்றே பொது மக்கள் சபை கூட்டிப் புலம்புகின்ற' போலிப் பெரியார்களைப் பார்த்துத் 'தங்களில்லில் ஏன் தானே தண்டமிழைக் காத்து தழைக்கவழி செய்யாமற் தடை செய்து விட்டீர்?' என்று வினவும் அதிரைதாசன், 'குன்றெனவே நாம் சிறந்து நின்றதெல்லாம் குவலயத்திற் பழங் கதையாய்ப் போயிற்றன்றோ' என்று குமுறும் மகேந்திரன், 'வளர்க தமிழ் மக்களென' வாழ்த்தும் மண்டலக்கிளி, 'ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமே இன்றி உலகுதனை ஆண்டிட்ட ஒண்டமிழன்' என்று பெருமிதங் கொள்ளும் மீசல் பி. எம். அபூபக்கர், 'நந்தா ஒளியை வீசும் நற்றமிழேயென் தாயே' என்று பணிந்து நிற்கும் முகவைச் செல்வன், 'நற்றமிழின் நனிசிறப்பு முழுது மோர்ந்து நந்தமிழா உன் வாழ்வை மனத்திற்கொள்வாய்' என்று அறைகூவும் முத்தமிழ்த்தாசன், 'மங்காத் தமிழ்மறவர் வாழும் மலாயாவில் தங்கத் தமிழதற்குத் தோழா தாழ்வினியில்லையப்பா' என்று உறுதி கொள்ளும் முத்மிதழன், 'அற்றதடா தமிழினத்தின் பெருமையெல்லாம் அறிவிலியே தூங்குகின்றாய் தூக்கம் கேடா?' என்று பொங்கியெழும் முருகிளவல்,

என்றும் தமிழ்ப்பணி என்றும் தமிழ்ப்பணி
என்றே இயங்கிடுவான் — பகைத்
துன்பம் எதிர்ப்படின் தூள்பல வாக்கித்
தொடர்ந்தே செயற்படுவான் — புகழ்
குன்றும் செயலெனில் கோடி கொடுப்பினும்
கொஞ்சமும் நெஞ்சிசையான் — தமிழ்
மன்றம் அமைத்தே மனத்தை யிணைத்தே
மடமையை மாய்த்திடுவான்'

எனச் சிங்கநாதஞ் செய்யும் முருகுதாசன் என்போரின் தமிழ்ப்பற்றும் எழுச்சியும் நெஞ்சை யள்ளுகின்றன.

தமிழரின் வாழ்விலும் வளத்திலும் அதிக சிரத்தை கொண்டு அவர்களிடத்துக் காணப்படும் குறைபாடுகளைச் சாடி, ஈடேற்றத்துக்கு வழிவகை கூறுங் கவிஞர்களாகச் சுல்தான், தமிழெழிலன், நகைச்சுவைப் பித்தன், பூங்குன்றன், மழலைச் செல்வன், முகிலன் ஆகியோர் இத்தொகுதியில் விளங்குகின்றனர்.

அறந்தையன், கிருஷ்ணதாசன், காரைக்கிழார், நபர், முத்தையன், மண்டலக்கிளி என்போர் இயற்கை எழிலிலும் கல்லூர் மணியம், சோம

# நோக்கு

சன்மா, பா: வலன் ஆகியோர் இலக்கிய இன்பத்திலும் திளைக்கின்றனர்.

இக்பால், சுப்பிரமணியன், பெரியராமு, மறைமுடி வல்லத்தரசு, மானகிரி சடாச்சரம், முரசு, நெடுமாறன், வையக்கோன் ஆகியோரின் படைப்புகளில் 'அன்பு' கொலுவிருக்கின்றது.

கவிதைக்குப் பொருள் முக்கியமன்று. பொருள் அறுகாகவும் அமையலாம்; ஆனையாகவும் இருக்கலாம். எப்பொருளாயினும் அப்பொருளைக் கையாளும் முறையிலேயே கவிதையின் உயிர்த்துடிப்பும் கவிஞனின் தனித்துவமும் தங்கியுள்ளன. இத் தொகுதியில், 'கார்த்திகையின் காதல்' 'மல்லிகை' 'ஏனோ,' 'யாது தவம் செய்தனை?' 'விழித்தேன் சிரித்தேன் 'இயற்கையில் ஏழைமை' 'பனித்துளி' 'உயிர்க் கவிதை' 'இதற்குத்தானா?' 'மலர் அறிவுறுத்தல்' 'தனித்தே பிறந்தான்' 'தமிழ்த்தொண்டு' ஆகிய கவிதைகளிற் பொருள் நன்கு கையாளப்பட்டுள்ளன. கற்பனை நயத்திற் சிறந்து விளங்குகின்றன.

பல கவிஞர்கள், இளைஞர்களாக விருப்பதனாலோ என்னவோ, 'வாக்கு வளம்' குன்றியவர்களாகவே காணப்படுகின்றனர். மூட்டும் உணர்ச்சிகளை ஒரு கட்டுக் கோப்பிற் கொட்டித் தீர்க்க அவர்கள் படும் இன்னல் வெளிப்படையாகவே பல கவிதைகளிலே தென்படுகின்றது. இதனாற் கூறவந்த பொருள் குழப்பமடைவதோடு 'செப்பலோசை'யுஞ் சிதைவுறுகின்றது. இந்நிலையிற் கூறவந்த பொருளை மிகவும் எளிய பதங்களை வைத்துக் கொண்டே இனிமையுறக் கூறிச்செல்லும் திருமதி அமிர்தம் சோமசன்மா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஒருவரின் உள்ளத்துணர்வை வடிப்பதற்குப் பல வடிவங்கள் உள்ளன. கதையாக அமைக்கலாம்; நாவலாகப் படைக்கலாம்; கட்டுரையாக எழுதலாம்; பேச்சாகப் பேசலாம்; நாடகமாக நடிக்கலாம்; கவிதையாகப் புனையலாம். இவ் வடிவங்கள் ஒவ்வொன்றும் தனியான இயல்புடையவை. கவிதை வடிவம் என்று வந்து விட்டால் அதற்கு சொல்லும் ஓசையுமே முக்கியமானவை. இச்சிறப்புகள் இக்பால், கவின் செல்வன், காரைக் கிழார், சுப்பிரமணியன், சோமசன்மா, நபர், பா. வலன், பெரியராமு, மகேந்திரன், மண்டலக்கிளி, மழலைச் செல்வன், மறைமுடி வல்லத்தரசு மானகிரி சடாச்சரம், மீசல் பி. எம். அபூபக்கர், முகிலன், முத்தையன், முருகுதாசன்,

### குடை

குடையொடு நடக்கும் கொடியிடை! அழகின்
மடியிடை மிதக்கும் மாதே! சுடுகிற
வெய்யில்
நின் மேனியிலே நேராய்ப் படுவதால்,
தான் குளிர்ந்திடல் தகும். தவிர்ந்து
தேன் மலர் ஒதுங்கும் நின் திருமுகம் வாடாதே.

மஹாகவி

வையக்கோன், நால்வர் ஆகியோரின் கவிதைகளில் தக்க அளவுக்குக் காணப்படுகின்றமையினாலேதான் இத் தொகுதியின் தரம் உயர்ந்து நிற்கின்றது. இவர்களுள்ளும் 'யாநடை கைவந்த பாவலர்'களை எளிதில் கணித்துக் கொள்ள முடிகிறது.

இத்தொகுதியில் 'மண்வாசனை'ப் படைப்புகள் இடம் பெறுதிருப்பது வியப்புக்குரியது. மொழிப்பற்று, சமுதாயச் சீர்கேடு, இயற்கை, அன்பு என்பன தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதற்கும் பொதுவானவையே. இவற்றைப் பொருளாக வைத்து யாரும் பாடலாம். 'மலாயாவில் தமிழ்க் கவிதைகள்' என்ற இத் தொகுதியில் மலைநாட்டின் சிறப்பான இயற்கை வளம், மக்களின் அகவாழ்க்கை புறவாழ்க்கை முறைகள், இறப்பர்த் தோட்டத்துக் காட்சிகள், தொழிலாளர்களின் விழாக்கள், கலைகள் முதலியவை பற்றிய கவிதைகள் இடம் பெறுமையால் இத்தொகுதி மலாயாவில் தமிழ்க் கவிதைகள் என்ற தனித்துவத்தை இழந்து, வெறும் தமிழ்க் கவிதைத் தொகுதியாகவே காணப்படுகின்றது. இந்த இடத்திலேதான் செல்வன் கலைராஜா சிறப்புப் பெறுகின்றார்.

பண்டு சரிதையைப் பரத்தும்
பொன்னேடு
பண்பாடும் புலமையிலே
பனிச்சிடும் தங்கவயல் பால்
ஊற்று ரப்பர், ஈயம்
பண்ணை மலைநாடு!

என்று பாடும் அவரது பார்வை போற்றுதற்குரியது.

மொத்தத்தில் இக்கவிதைத் தொகுதி மலைநாட்டின் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்த அளவில் ஓர் எல்லைக் கல்லாகும். அடுத்து வரும் மலைநாட்டுக் கவிதைத் தொகுதிகள் மலைநாட்டின் தனித்துவத் தமிழ் வளத்தைப் பிழிந்து காட்ட வல்லனவாக வரலாம் என்ற நம்பிக்கையையும் இத் தொகுதி தருகின்றது. கடல் கடந்து சுரந்து பொங்கும் தமிழ்த்தேனைப் பருக விரும்பும் எழுத்தாளர், சுவைஞர் இதனை வாசித்து இன்புறலாம்.

# அமைச்சர் முஹம்மதுவும் ★ ★
# ★ ★ ★ 'இளம்பிறை'க் கருத்தும்

திருக்குர்ஆன் 1400 ஆவது ஆண்டு நிறைவு விழா தேசீயக் குழு பற்றி இளம்பிறை திருக்குர்ஆன் மலரில் நாம் தொட்டுக் காட்டிய பிரச்சினைகள் ஈழத்து முஸ்லிம்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது; நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து நமக்குக் கிடைத்திருக்கும் கடிதங்கள் இதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளன. எமக்குக் கிடைத்த கடிதங்களுள் இரண்டினை மட்டும் இங்கு மாதிரிக்காகப் பிரசுரிக்கின்றோம்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர் ஒருவர் வருமாறு எழுதியுள்ளார்:

> இளம்பிறை, மீலாத் மலரில் இருந்து ஒரு புதிய கோலத்தைக் காட்டுகின்றது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள் விவகாரங்களை விமர்சித்து வந்த இளம்பிறை, திருக் குர்ஆன் மலரில் உள்ளூர் அரசியலிலும் கருத்துக்கள் வெளியிட முற்பட்டுள்ளது போலத் தோன்றுகின்றது. இப் புதிய மோகம் ஏனோ? இருப்பினும், இலக்கியப் பாதையில் நடுநிலையான போக்கைப் பின்பற்றி வந்த இளம்பிறை, அரசியலிலும் அவ்வாறே நெறி பிறழாது நடக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

வாழைச்சேனை ஆசிரியர் ஒருவர் வருமாறு எழுதியிருக்கின்றார்:

> 'இளம்பிறை திருக் குர்ஆன் மலர் பார்த்தேன்; மலர் சிறப்பாக அமைந்திருந்தது. ஆனால், திருக்குர்ஆன் தேசீய விழாக்குழு பற்றி சகட்டுமேனி விமர்சனம் வரவேற்கத் தக்கதல்ல. தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பத்திரிகையில் பிரதிபலித்துக் காட்டுவது அழகல்ல. அல்ஹாஜ் எம். எச். முகமட் ஒரே முஸ்லிம் அமைச்சர். அவரின் உற்சாகத்தைத் தட்டி நிறுத்த முற்படுவது கவலைக்குரியதாகும்.'

இளம்பிறை கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. இதனை மீண்டும் வலியுறுத்துகின்றோம். முஸ்லிம் சகோதரர்களுடைய சமுதாய நலனில் அக்கறை காட்டுவதிலும், அவர்களுடைய சேமங்களுக்காக உழைப்பதிலும், எந்த இடர் எதிர்ப்பட்ட போதிலும் 'இளம்பிறை' பின்நிற்க மாட்டாது என்பதும் உறுதி. மனிதன் சமுதாயப் பிராணியாக இருப்பதினால், அரசி

யற் பிராணியாகவும் இருக்கின்றான்: அந்த அளவில் மட்டு மேனும் 'இளம்பிறை' அரசியலில் அக்கறை காட்டுதல் தவிர்க்க முடியாததாகும். அஃது அரசியல் அன்று; சமுதாயப் பற்று என்பதே பொருந்தும்.

இன்னுமொன்று. திருமறையின் 1400 ஆம் ஆண்டு நிறைவு விழா அரசியற் பிரச்சினையே அன்று. இதனை ஈமான் கொண்ட இஸ்லாமியன் எவனும் அறிவான். எனவேதான், மேற்படி புனித விழாவினை அரசியற் பிரச்சினையாக்கி ஆதாயம் பெற எடுக்கப் பட்ட முயற்சிகளை இளம்பிறை கண்டித்தது - கண்டிக்கிறது! இத்தகைய இழி செயல்கள் நடைபெற்றால் என்றும் கண்டிக் கவும் பின் நிற்க மாட்டாது.

காலம்காலமாக நிலை நிறுத்தி வைக்கப்பட வேண்டிய இப் புனிதநிகழ்ச்சிக்கு அரசியல் சாயம் பூசி, அதன் புனிதத்துவத்தைக் கெடுத்ததைத் தன்மானமுள்ள-சுயமரியாதையுள்ள-சுய சிந்தனை யுள்ள இஸ்லாமியன் எவனும் ஒப்பான். அந்த இஸ்லாமியனின் மனச்சாட்சியாகவும் - குரலாகவுங்கூட 'இளம்பிறை' வெளிவந்து கொண்டிருப்பதினால், இவற்றைப் பற்றிய விமர்சனம் எழுதுவதில் 'இளம்பிறை' என்றும் தயங்காது. இது கட்சி அரசியல் என்று அரசியல்வாதிகளின் கூஜா தூக்கிகள் கூடக் கூறக் கூசுவர். இஃது எம்மினத்தின் பிரச்சினை - எமது பண்பாட்டின் பிரச்சினை- எமது பாரம்பரியத்தின் பிரச்சினை - முஸ்லிம்கள் சகலருடைய முக்கிய பிரச்சினை!

நமது கருத்துக்களுக்குச் சாதகமாக வந்த ஏராளமான கடிதங்களை, நம கருத்தை வலியுறுத்தும் ஆயுதமாகக் கொள்ளாது, நடுநிலை கருதி இங்கு அவற்றை பிரசுரிக் காது விடுகின்றோம். அவற்றை எழுதி எம்மை ஊக்கு வித்த இளம்பிறை அன்பர்கள் அனைவருக்கும் நன்றி; அவற்றினைப் பிரசுரிக்காததற்காக அவர்களிடம் மன்னிப் புக் கோருகிறோம்.

இளம்பிறைக்கு இன்றைய தொழில் அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது அவர்களுடன் தனிப்பட்ட குரோதம் எதுவுமே கிடையாது. இது சத்தியம். இதனை இளம்பிறை வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

உண்மை இதுதான். இளம்பிறை சார்பிலும், இளம் பிறையின் சகோதர நிறுவனமான 'அரசு வெளியீடு'வின் சார்பிலும் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டு, உரிய மரியாதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். தேசீய அரசாங் கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு முஸ் லிம் - ஒரேயொரு தமிழ் பேசும் அமைச்சர் என்பதை மறக்காமல் இளம்பிறை என்றும் அவருக்கு உரிய இடத்தைத் கொடுத்து வந்திருக்கிறது. இந்நிலையில் அவர்மீது எமக்குத் தனிப்பட்ட குரோதம் இருப்பதாகக் கூறமுற்படுவது அர்த்தமற்ற ஒன்றாகும்.

## அமைச்சரின் பிரதான கூஜா தூக்கி!



விமானக் கம்பனி ஒன்றில் வேலைபார்த்த இவர் மந்திரி முஹம்மதுக்கு கூஜா தூக்கி. இப்பொழுது கூஜா தூக்கிகள் வரிசையில் முதன்மை பெற்ற இறுமாப்புடன் 'இளம்பிறை' யின் இஸ்லாமியத் தொண்டுகளுக்கு அடைக்குந் தாள் போடும் பணியில் ஈடுபட்டுள்ளாராம். இவர் மந்திரியின் கையாளாகி, புதிய உத்தியோகத்திலே குந்தியிருப்பதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. சினிமாச் செய்திகள் எழுதுவதுதான் இஸ்லாமியத் தொண்டு என இவர் தம்மையே ஏமாற்றுவதிலும் நமக்கு ஆட்சேபமில்லை. அகில இலங்கை முஸ்லிம் லீக் தன் பொக்கெட்டிலே இருப்பதாக வேறு நடிக்கின்றார். வானொலி நடிகராக இருந்த அனுபவம் போலும். இவர் எந்த நிறுவனத்திற்கு வேலை செய்தாலும், பிற்கதவினால் 'கொமிஷன்' அடிப்பது லீக்கர்களுக்குத் தெரியுமா? இவருடைய தரகுகள் எவை? இதன் விபரங்களை வெளியிட இளம்பிறை என்றுந் தயாராக இருக்கின்றது. இவர் தமது வழிகாட்டி மாஹிரின் கதியைத் திரும்பிப் பார்க்கட்டும். ஆனால் இளம்பிறையின் இஸ்லாமியப் பணிக்கு இவரைப்போல பல கூஜாக்கள் சேர்ந்தும் அடைக்குந்தாள் போட முடியாது. எல்லாம் வல்லவன் இறைவன்; இணைதுணையற்றவனும் அவனே!

திருக் குர்ஆன் தேசீய விழாக்குழு ஏக முஸ்லிம் ஏடாக இந்நாட்டில் மலரும் இளம்பிறையை திருக் குர்ஆன் விழா நிகழ்ச்சிகளில் இருந்து ஒதுக்கியமை நமக்கல்ல, அமைச்சரின் நற்பெயருக்கே களங்கம் ஏற்படுத்தியுள்ளது. இதற்கான காரணங்கள் முந்திய இளம்பிறைப் பூவில் ஓரளவு கோடிகாட்டப் பட்டுள்ளது.

இளம்பிறைக்கு உரிய இடம் அளிக்கப்படாமை, அமைச்சர் முஹம்மதுவின் அடிவருடிகளாக நடித்து, அவருடைய அரசியல் வாழ்விற்கே குழி பறிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சிலருடைய சொந்த குரோத விரோதங்கள் காரணமாக இருக்கக்கூடும் என்பதை நம்மாலும் ஊகிக்கமுடிகிறது. இலக்கிய உலகில் இளம்பிறை கடைப்பிடிக்கும் நேர்மையான நடுநிலைமையான போக்கினை விரும்பாதவர்கள் மந்திரி முஹம்மதிற்குத் தம்மையே மதிமந்திரிகளாக நியமித்துள்ளார்கள் என்பதும் அறியக் கிடக்கின்றது. இந்தக் 'குடிலர்'களுடைய ஆலோசனையும் 'இளம்பிறை' புறக்கணிக்கப்பட்டமைக்கு ஏதுவாக இருக்கலாம். இத்தகைய ஓர் இழி செயலுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அமைச்சர் முஹம்மதும் உடந்தையாக இருந்துள்ளார் என்பதை நன்கு ஊகிக்க முடிகின்றது. இதனை 'இளம்பிறை' அன்றும் கண்டித்தது-இன்றும் கண்டிக்கிறது! முஸ்லிம் இனத்தின் நலன்களை யார் எந்தச் சந்தர்ப்பத்திலும் விலைபேச முற்பட்டால் 'இளம்பிறை' கண்டனக் குரல் எழுப்புவதற்கு என்றும் பின் நிற்கமாட்டாது.

Edited, Printed and Published by M. A. Rahman and Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13.

இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது!

# இளமைப் பருவத்திலே!

ஆசிரியர்:

**எம். ஏ. ரஹ்மான்**

**சேர் வின்ஸ்டன் சர்ச்சில் பாராட்டி எழுதிய கடிதம் உள் முகப்பிலே பிரசுரமாகியுள்ளது.**

*13 உலகப் பெரியார்களின் படங்களுடன் அவர்களின் இளமைக் காலத்திலே நிகழ்ந்த சுவையான சம்பவங்களைக் கூறும் சிறுவர் இலக்கிய நூல்.*

**விலை. ரூ. 1-25**

*தபால் முத்திரையாகவோ, போஸ்டல் ஓடராகவோ அனுப்பிப் பெறலாம்.*

கல்வி இலாகாவினால் நூல் நிலையத்திற்குரிய சான்றிதழ் பெற்ற சிறுவர் இலக்கிய நூல்



அரசு வெளியீடு

*231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13*

Registered as a Newspaper in Ceylon




Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13.